முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 6 | 14-8-59 | வெள்ளி | ஒலி: 17

குறளோவியம்

"அவனது அழகிய கவர்ச்சிகரமான தோற்றமே அவனை உத்தமன் என்று ஊருக்கு உணர்த்துகிறது. அவன் கண்களில்தான் எவ்வளவு கனிவு! புன்னகை புரிகிறான். "புனிதனே! புவிக்கோர் நல்முத்தே!" என்று புகழ்ந்திட முந்துகிறது நா! அதிகமாகக்கூட அவன் யாரிடமும் பேசுவதில்லை. கேட்ட கேள்விக்குக் கூட இதழ் அசைவது தெரியாமல் பதில் கூறுகிறான். பெண்கள் நிறைந்த கூட்டமொன்றில் அவனுக்கு விழாக் கொண்டாடி வரவேற்பு வழங்கினர். கூடிப் பெண்களை அவன் ஏறெடுத்துப் பார்க்கவில்லை. மகளிர் அவனை சீலம் நிறைந்தவன் என்று சிங்காரப் பண்பாடிப் போற்றி மகிழ்ந்தனர். அவனோடு இன்னொருவன் வந்தானே அவன் மிகவும் கெட்டவன். அவன் பார்வையே சரியில்லை. பெண்களிடம் சுற்றிச் சுற்றியோடி தான் யார் என்பதைக் காட்டிக்கொண்டான். முறுக்கு மீசை. முரட்டு உடல். மூடத்தனம் நிறைந்த மூளை. மொத்தத்தில் நல்லவன் அல்ல. அலையும் விழிகளும், இளித்த வாயும் போதும்; அவன் ஒரு காமுகன் என்பதை எடுத்துக்காட்ட!"

—இப்படி அந்த இரண்டு மனிதர்களைப்பற்றியும் ஊரார் தங்கள் மதிப்புரையை எழுதித் தள்ளினார்கள். இருவருமே அந்தப்பகுதி மக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் படைவீரர்களைக் கண்காணிப்பதற்காகப் புதிதாக ஊருக்கு வந்த தளபதிகள்.

வரவேற்பு விழா முடிந்து ஒரு கிழமை கழிந்தது. அழகிய தோற்றமும் ஊரார் மதிப்புரையும் பெற்ற தளபதி ஒருநாள் இரவு ஒளிந்து ஒளிந்து தெருவில் நடந்தான். ஊரார் அவனை உற்றுக் கவனித்தனர். தெருக்கோடியில் தேன்மொழி என்று குடும்பப் பெண்ணொருத்தி. அவள் ஆளன் ஊரில் இல்லை. அவளை அணைத்து இன்புற இல்லில் நுழைந்தான்,

மலர் கசங்கிடும் வேளையில் இன்னொரு தளபதி உள்ளே பாய்ந்தான். "இழிமகனே! கடைப் பிறவியே! உயிர் தேவையெனில் ஓடிப்போ!" எனச்சீற அதுகண்டு கொடியவனும் குமுறலானான். இருவருமே போரிட்டார். முதல்வன் மாண்டான். அடுத்தவனே நல்லவன் எனும் பெயர் பூண்டான்.

"நேர்மையானவன் போல் தோன்றிய தளபதி கீழ்மைச் செயல் புரிந்தான். கீழோன் போல் தோன்றியவனே மேலான செயலாலே மேலோன் ஆனான்" என வாழ்த்தியது ஊர்.

இதையே வள்ளுவர் இரு அடியில், "நேராகத் தோன்றும் அம்பு கொலைச்செயல் புரியும் — வளைந்து தோன்றும் யாழ் இன்பம் பயக்கும்"—என்று கூறிவிட்டு, "அவ்வாறே மாந்தரையும் அவர்தம் உருவத்தால் கணக்கிடுவதை விடுத்து, அவர்களின் செயல்களைக்கொண்டு கணக்கிடுதல் நன்று" என விளக்குகிறார். அதற்கு இதோ இணையற்ற குறள் :—

"கணை கொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்னர்
வினைபடு பாலாற் கொளல்."

கருணாநிதி

பெருமூச்சும் விடுவதில்லை !

❋

நேரு பிறந்த கங்கைச் சமவெளி!

அங்கு தான் அமளி தோன்றியிருக்கிறது. அந்த மாநிலம்தான் நம்மை ஆண்டு வரும் வடவர் ஏகாதிபத்திய மரத்தைத் தாங்கும் நிலம்!

உத்திரப் பிரதேசம் — (வடக்கு மாநிலம்) என அழைக்கப்படும் அந்த மாநிலத்தில் நேருவின் பெயரால் — காங்கிரஸ் கட்சியின் பெயரால் அரசோச்சிவரும் சம்பூர்ணனந்தைக் குற்றம் சாட்டித்தான் அந்த எதிர்ப்பு அலை எழுந்தது!

எதிர்த்தவர்கள் — யார்? கம்யூனிஸ்ட்டுகளா? இல்லை! பிரஜா சோஷலிஸ்டுகளா? இல்லை! சோஷலிஸ்டுகளா? இல்லையில்லை!

பின்னர் இப்படிக் காங்கிரசை எதிர்க்கும் துணிவு படைத்த்வர் அந்த மாநிலத்தில் யார்?

காங்கிரஸ்காரர்கள்தான்!

கதர் கட்டி, 'காந்திக்கு ஜே' போட்டு, விழாக் காலங்களில் கைராட்டை சுற்றும் காங்கிரஸ் வாதிகள் தான் காங்கிரஸ் முதலமைச்சரை எதிர்த்திருக்கின்றனர்!

காங்கிரஸ் மேலிடம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும். அது நம் பதவியைப் பாதிக்கும் என்று அறிந்திருந்தாலும் கூட அவர்கள் எதிர்த்திருக்கின்றனர்.

பதவி யிழந்த — பதவி கிடைக்காத காங்கிரசாரா? இல்லை!

98 காங்கிரஸ் (எம். எல், ஏ-க்கள்) சட்ட மன்றத்து உறுப்பினர்கள்!

அவர்கள்தான் குற்றம் சாட்டியுள்ளனர். அவர்கள் கூறும் குற்றச்சாட்டுகள் எல்லா மாநிலத்திலும் உயிரோடு வாழும் குற்றச்சாட்டுகள்! அவைகள் வருமாறு:

* மட்டமான ஆட்சி நடக்கிறது.

* நிர்வாகம் சோம்பிக் கிடக்கிறது.

* வீண் செலவுகள் அதிகமாயிருக்கின்றன.

* இலஞ்சம் தலையை விரித்துப் போட்டுக் கொண்டு ஆடுகிறது.

* அமைச்சர்களின் பேரில் பலப்பல குற்றச் சாட்டுகள் உள்ளன!

— இப்படிக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள், அந்த வட நாட்டுக் காங்கிரஸ் காரர்கள்!

அந் நாட்டைவிட நம் மாநில நிலைமை — நிர்வாக நிலைமை சீர்கேடுற்றிருந்தாலும், நம் காங்கிரசார் பேசுவதில்லை; பெருமூச்சுகூட விடுவதில்லை!



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

48. ஆங்கில வரலாற்றில் ஒரு பொற்காலம்

அன்புள்ள மாதவி,

பிரான்ஸ் நாடு சர்வ வல்லமை பெற்ற ஒரு லூயி மன்னனைக் கண்டதைப் போலவே, இங்கிலாந்தும் சர்வ சக்தி படைத்த ஒரு ராணியைக் கண்டது. லூயி மன்னன் இறந்த போது, பிரஞ்சு நாட்டின் கஜானு காலியாகி இருந்தது. வறுமையும் பிணியும் மக்களின் வாழ்க்கையில் தலை நீட்டத் தொடங்கியிருந்தன. ஆனால், இங்கிலாந்தின் வரலாற்றில் இருள் கப்பியிருந்தபோது அரியணை ஏறிய முதலாம் எலிசபெத், ஒரு பொற்காலத்தை சிருஷ்டி செய்து, அந்நாட்டை ஒளி வீசச் செய்த பின்பே மாண்டுபோனாள். வலிமையற்றிருந்த பிரஞ்சு நாட்டை வல்லரசாக்கி, கலையும் இலக்கியமும் கைகோர்த்து வளரச் செய்த லூயி, நாடு நலிவுப் பாதையில் நடைபோடும் சூழ்நிலையைத்தான் உண்டாக்கி இருந்தான். ஆனால், எலிசபெத் ராணி இறந்த பொழுதோ, உலகின் பரந்த நீர்ப்பரப்பிலெல்லாம் ஆங்கில நாட்டின் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது. ஆங்கில இலக்கியத்தின் மகோன்னத மேதைகள் ஆங்கில மொழி உலக மொழி ஆவதற்கான அஸ்திவாரத்தை அமைத்துக் கொண்டிருந்தார்கள். அரசியல் அதிகாரத்தோடு, மதத் தலைமையையும் அதற்கான அதிகாரங்களையும் தன்னிடத்தே கொண்டிருந்ததாலேயே மக்களின்மீது முழு ஆதிக்கம் செலுத்த முடியும் என நம்பிய மன்னர்கள், அரசியல் அதிகாரத்தோடு நின்று விடாமல், மதத் துறையிலும் செல்வாக்குப் பெற முயன்று, தெய்வீக வாரிசுரிமையை நிலை நாட்ட முனைந்தனர். இதன் விளைவாகத்தான் லூயி மன்னன் பிராடஸ்டண்டுகளைப் பழிவாங்கியதைப்போல, எலிசபெத் ராணி கத்தோலிக்கர்களைப் பழிவாங்கினாள்.

ஆங்கில அரியணையை அலங்கரித்த மன்னர்களுக்குள் எலிசபெத் ராணிக்கு சிறப்பானதொரு இடம் உண்டு. அவளுடைய ஆட்சிக்காலம் இங்கிலாந்தின் பொற்காலம். எட்டாம் ஹென்றிக்கு வாரிசுரிமை கொண்டாடி, இங்கிலாந்தின் ஆட்சிப் பொறுப்பை எலிசபெத் ஏற்றுக் கொண்டபோது அவளுக்கு வயது இருபத்தைந்து.

கோமள முகமும், குறுகுறுப்பான விழிகளும், அரசியல் அறிவுக் கூர்மையும், ஆட்சிபீட மமதையும், கல்வி யார்வமும், கொள்கையற்ற போக்கும் தந்தை எட்டாம் ஹென்றியிடமிருந்து அவள் பரம்பரைப் பாத்தியதையாகப் பெற்ற சொத்து. பெண்ணாகப் பிறந்த காரணத்தால். சாகசமும் சமத்காரமும் வேறு அவள் நிரம்பப் பெற்றிருந்தாள். ஸ்பெயின் மன்னன் ஃபிலிப்பின் தூதனாக இங்கிலாந்துக்கு வந்த ஒருராஜதந்திரி 'ஒருலட்சம் பிசாசுகளால் ஆட்டிப் படைக்கப்படும் பெண் இவள்' என்று எலிசபெத் ராணியை வர்ணித்தானும்! எலிசபெத்போன்ற பெண்ணொருத்தியை ராணியாகப் பெற்றதால், இங்கிலாந்து லாபமடைந்ததே தவிர நஷ்டமடையவில்லை. இயற்கையளித்த வரப்பிரசாதமான அழகையும், ராஜதந்திரக் காரியங்களுக்கே பயன்படுத்தியவள் எலிசபெத்! ஐரோப்பிய மன்னர்களும் இளவரசர்களும், அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட தூதுவர்களும் அவளுடைய அழகென்னும் மந்திரக் கயிற்றால் ஆட்டுவிக்கப்படும் பம்பரமாயினர்.

ஆங்கில இளைஞர்களை அவர்களுடைய அழகு ராணியின் காந்த சக்தி, கடல்களைத் தாண்டச் செய்தது; காவியங்களை வரையச் செய்தது; போர்களைப் பொழுதுபோக்காக எண்ணச் செய்தது! ஃப்ரான்சிஸ் டிரேக். வால்டர்ரலே போன்ற தலை சிறந்த ஆங்கில மாலுமிகள் இங்கிலாந்தின் கடல் பலத்தைப் பெருக்கி வியாபாரத்தை வளர்த்தனர். காலனிகளைப் பெருக்கினர்! ஷேக்ஸ்பியர், மார்லோ, ஸ்பென்ஸர் போன்ற இலக்கிய மேதைகள் எண்ணற்ற முத்தாரங்களை ஆங்கில அன்னைக்குப் பூட்டி மகிழ்ந்தனர். வில்லியம் செசில் வால்சிங்ஹேம் போன்ற நிர்வாக மேதைகள் எலிசபெத் மகாராணியின் ஆட்சிப் பொறுப்பை இரு கண்களாகக் கட்டிக் காத்தனர். சிரிப்பால் நண்பர்களை வசப் படுத்தி, சித்ரவதையால் விரோதிகளைப் பயமுறுத்தி நாட்டில் நல்லாட்சி நிலவச் செய்தவள் எலிசபெத்.

"நாடு. அது தவிர எனக்கு வேறு லட்சியமில்லை. என்னுடைய குடி மக்களின் அன்பைப் போல் — பாசத்தைப் போல் — விசுவாசத்தைப் போல் எனக்குப் பிரியமானது வேறொன்றுமில்லை," என்று பாகு மொழி பேசி, மக்களைப் பரவசப் படுத்தி நாடாண்டவள் எலிசபெத். ஸ்பெயின் மன்னனிடம் தன்பால் காதலை வளர்த்து, சலுகைகள் பலவற்றைப் பெற்றபின் அவனுடைய காதலை நிராகரித்த சாகசக்காரி அவள்! ஃபிலிப்பின் உறவினர்களையும், ஆஸ்திரிய நாட்டு சார்லசையும், ஆஞ்சோ பிரபு ஹென்றியையும், அவனுடைய சகோதரன் ஃப்ரான்சிஸையும் அரசியல் சலுகைகள் பெறுவதற்காக எலிசபெத் காதலித்தாள் என வரலாற்றில் ஒரு கூற்றுண்டு. கன்னியாகவே கடைசி வரையில்காலம்கழித்தஎலிசபெத், கள்ளக் காதலர் பலரை அரண்மனையில் வைத்துப் பராமரித்தாள் என்ற சரித்திரச்செய்தியை 'வதந்தி' என்று அலட்சியப் படுத்தி விடுவதற்கும் இல்லை! கன்னி ராணியின் காதல் வேட்டைக்கு இலக்காகி, இளமை இழந்தவுடன் காராக்கிரகத்தில் தள்ளப்பட்டு உயிரிழந்த வாலிபர்களின் பட்டியலும் வரலாற்றில் உண்டு. எலிசபெத் தனது சுயநலத்தை—சுகபோக லீலா விநோதங்களை — ஆடம்பரத்தாலும், ஆற்றல் மிக்க ஆட்சிமுறைகளாலும் மூடி மறைத்து, மக்களின் இதயங்களிலெல்லாம் அன்பு ராணியாக அரசோச்சியவள்!

எலிசபெத்துக்கு எண்ணற்ற காதலர்கள் இருந்தாலும், அவள் இதயப்பூர்வமாக நேசித்தவன் எஸ்ஸக்ஸ் பிரபு ஒருவன்தான். காரியார்த்தமாகக் காதல் லீலை பலரிடம் புரிந்திருந்தாலும், பலன் கருதாது பாசத்தை எஸ்ஸக்ஸிடம் கொட்டினாள். வயது வளர்ந்தாலும் வனப்புக் குன்றாத வனிதை எலிசபெத்திடம் எஸ்ஸக்ஸ் எந்த அளவு காதல் கொண்டிருந்தான் என்பது சரியாகத் தெரியவில்லை. ஆனால் எஸ்ஸக்ஸ் இறந்தவுடன் எலிசபெத் இதயம் உடைந்து போனாள் என்பது மட்டும் உண்மை. அவன் இறந்த ஓரிரு ஆண்டுகளிலேயே அவளும் இறந்து போனாள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எலிசபெத்தின் ஆட்சிக் காலத்தில் கடல் பலம் பெறவும், மேற்குக் கரையில் காலனிகள் ஸ்தாபிக்கவும் இங்கிலாந்துக்கும் ஸ்பெயினுக்கும் பலத்த போட்டி இருந்தது. ஆங்கிலேயரின் கடல் பலத்தை அழிக்க ஸ்பெயின் மன்னன் ஃபிலிப் வரலாற்றுப் புகழ்பெற்ற "ஆர்மெடா' என்ற கப்பற் படையை அனுப்பி வைத்தான். இங்கிலாந்தின் எதிர்காலம் பயங்கரமாகக் காட்சியளித்தது. ஸ்பெயின் கப்பற் படை வெற்றி பெறுமானல், இங்கிலாந்தில் வசித்த கத்தோலிக்கர்கள் எலிசபெத்துக்கு எதிராகப் புரட்சிக் கொடி உயர்த்துவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. சாதுரியம் மிக்க எலிசபெத் தன்னுடைய படைகளிடமும் மக்களிடமும் சொன்னாள்: "விசுவாசமும் ஆறாத அன்பும் கொண்டுள்ள என்னுடைய மக்களிடம் எனக்குக் கொஞ்சங்கூட அவநம்பிக்கை இல்லை..................பலஹீனமான பெண்ணுடலைப் பெற்றவளாக நான் இருக்கலாம்; ஆனால் வேந்தன் தன் ஒருவனுக்கிருக்க வேண்டிய உறுதியான இருதயம் என்னிடத்தே உண்டு...வேற்று மன்னனின் காலடி ஆங்கில மண்ணில் பட்டுவிடும் என்ற எண்ணமே அருவருக்கத்தக்கது. ஆங்கில நாட்டு எல்லையை ஆக்ரமிக்கும் துணிவு படைத்த ஐரோப்பிய மன்னன் இருக்கிறான் என என்னால் நம்பமுடியவில்லை..."

இந்த வாக்கியங்களை எலிசபெத் சொல்லி முடிப்பதற்குள்ளாகவே, ஆங்கிலக் கப்பற்படையால் 'ஆர்மெடா' தோற்கடிக்கப் பட்டுவிட்ட செய்தி வந்து சேர்ந்

[தொடர்ச்சி பக்கம்—8]

வெள்ளி 14—8—59 சென்னை

பாலில் நஞ்சு!

தூயவர்களுக்கு மத்தியிலே திரிந்துகொண்டிருக்கும் துரோகிகளைக் கண்டுபிடித்து விடுவது அவ்வளவு சுலபமல்ல; பார்வையின் கூர்மையிலிருந்து தப்பி வாழுகின்ற கலையைக் கற்றவர்கள், அவர்கள். ஆனால், சில நேரங்களில் அவர்கள் தங்கள் சுயரூபத்தைத் தாங்களாகவே காட்டிவிடுகின்ற செயல்களில் ஈடுபட்டுவிடுகிறார்கள்.

நல்லிதயம் கொண்ட பெண்களுக்கிடையே நஞ்சு மனம் கொண்டவன் பல நாட்கள் திரியலாம். திடீரென ஒருநாள் அவன் செயல் தீக்குழம்பைக் கக்குகிற நேரத்தில்தான் 'யாரவன்' என்பது புலனாகிறது!

'பிடிக்குள் சிக்கும் துடியிடையாளே! கொடியைத் தழுவும் நீ படரும் கொம்பாகவேனும் நான் இருக்கிறேன்'—என்பான், முதலில். பின்னால், 'உன்னால் என்னைப் புரிந்துகொள்ள முடியவில்லையா? உன் தூய நல் இதயத் தொட்டிலிலே படுத்துறங்கும் பச்சிளம் சிசுவாகவேனும் இருந்துவிட்டுப் போகிறேன்'—என்பான். ஆனால், கால வெள்ளத்தின் வேக ஓட்டத்திலே அவன் பாகுமொழிகள் அனைத்தும் அந்தப் பாவையரின் வாழ்வுக்குச் சுருக்குக் கயிறாகிவிடும்!

அவள் மந்தி கை சிக்கிய மலராகிவிடுவாள்; பந்தியிலே உமிழப் பட்ட சக்கையாகிவிடுவாள்! துரோகியெனப் புலப்பட்டபின், அவன் சென்ற இடத்தையே தேடமுடியாத நிலை ஏற்பட்டுவிடும்!

சொல் ஒன்றும் செயல் வேறுமாக வாழ்வழிக்கும் அத்தகைய நச்சுமனம் கொண்டவர்கள் எங்குதான் இல்லாமல் இல்லை? நம்மிடையே உலவிக் கொண்டிருக்கிற அவர்களைக் கண்டுபிடிப்பது தான் கடினமாக இருக்கிறது. ஆனால், அவர்களது சொல்லும் செயலும் சில நேரங்களில் தங்களை 'யார்' எனக் காட்டத் தவறுவதும் கிடையாது!

அரியணை மீதிருந்த அழகுத் தமிழ் அழுக்குப் படிந்த உள்ளத்தினரால் புறக்கணிக்கப்பட்ட நேரத்தில், தமிழ் மானம் மறக்காதவர்கள் போர்க்கோலம் பூண்டனர். எரிமலையாய்ச் சீறிய அவர்தம் உள்ளத்தை தாலாட்டும் தொட்டிலாக மாற்றும் சக்தி படைத்தவர்களோ 'தமிழ்த்தாயை மதிக்கிறேன்' என்று புலம்பினார்கள். 'அன்னையை அரியணையில் மீண்டும் ஏற்றுகிறோம்' என்று மாரதட்டினார்கள்.

'தமிழை ஆட்சி மொழியாக ஆக்குகிறோம்' என்று சென்னை கோட்டையிலிருந்து எழும்பிய குரலைக் கேட்டு தமிழகம் வாழ்த்தாமலா விட்டது?

ஆனால், இப்போது இன்னொரு புதுக் குரல் எழும்புகிறது; அதைக் கேட்டு அஞ்சி நடுங்குகிறது, துரோகத்தின் சாயலை இப்போதுதான் கண்டுகொண்ட சூதறியா நெஞ்சங்கள்!

பாலிலே நஞ்சு கலப்பதைப் பாராட்டுகிற உயிரை நாம் பார்க்க முடியுமா?

ஒரே ஒரு புலிதானே என்று, ஆட்டுப் பட்டியிலே அதற்குத் தங்குவதற்கு இடம்தர முடியுமா?

அசைப்போல் காலத்தால் மூத்த தமிழ் மொழியிலே, நேற்றும் இன்றும் பிறப்பெடுத்த வேற்று மொழிகளைப் புகவிட முடியுமா?

'முடியாது' என்று சொல்லுகிறவர்களை நோக்கித்தான் 'இனி விடியாது தமிழ் உங்களால்' என்கிறார், சென்னை மாநிலக் கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள்.

"தமிழில் பிறமொழிச் சொற்களைக் கலக்கத்தான் வேண்டும்"—இது அவரது வாதம். "அப்படிக் கலப்பதைத் தடுப்பவர்கள் தமிழ் வளர்ச்சியைக் கெடுப்பவர்கள்."—இது அவரது குற்றச்சாட்டு!

தமிழர்தம் இதயத்திலே வேல் பாய்ச்சுகின்றது இந்தச் செய்தி. 'உயிர் கொடுத்தேனும் தமிழ் காப்பேன்' என்ற உறுதி பெற்றவர்கள் சிந்திய குருதியைச் சாக்கடை நீராக மதிக்கும் பண்பு கண்டு தமிழ்ச் சமுதாயமே வெட்கித் தலைகுனிகிறது!

தனித் தமிழ் வாழ முடியாதாம், பிற மொழி நுழைவால்தான் புதுநிலை அடைய முடியுமாம்! தமிழ்க் குலத்தில் உதித்தவர்தான் தன்னை மறந்து பேசிவிட்டார். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே—வேறு மொழியேதும் இந்தப் புவியில் தோன்றா முன்பே—தனித்து வாழ்ந்த மொழி—இன்று தரம் கெட்டதே பிறமொழி நுழைவால் தானே!

"தமிழ் வாழ்க!" என்றுதான் அன்று சொன்னார்கள்; "தமிழ் வளர்க!" என்று இன்று சொல்லுகிறோம்; ஏன்? அன்று தமிழ் தானே வளர்ந்தது; இன்று வளர்க்கவேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்டது!

அமைச்சர் அணிந்திருக்கின்ற பதவிக் கண்ணாடியிலே படர்ந்திருக்கிறது அழுக்கு! அதை அகற்றிவிட்டுப் பார்த்தால், பிறமொழி நுழைவால் தமிழிலே கறை படிந்தது கண்ணுக்குப் புலப்படும்!

மறவர் குல தமிழர்தம் மானம் காத்த மொழியிலிருந்து எண்ணற்ற சொற்கள் மாய்ந்தழிந்து போனதை மறைக்கமுடியுமா? 'நீர்' என்ற நல்ல தமிழ்ச் சொல்லைத் தின்று விழுங்கிவிடவில்லையா 'ஜலம்'? 'நமஸ்கார'த்தின் இரும்புப் பிடியிலிருந்து 'வணக்க'த்தை மீட்டுவரப் பட்டபாடு கொஞ்ச நஞ்சமா?

தாள், 'பேப்ப'ராக மாறிற்று!

உழவன், 'கிஸானா'க மாறினான்!

அனுமதிச்சீட்டு, 'டிக்கெட்'டாக மாறிற்று!

திரு, 'ஸ்ரீ'யாக மாறிற்று!

இப்படிப் பல மொழிகள் வந்து புகுந்து சொந்த மொழியின் சிறப்பழித்து விட்டன!

இந்தக் கொடுமை போதாதென்றுதான், அமைச்சர் அவர்கள் மீண்டும் பிறமொழிச் சொற்களை 'வருக, வருக' என்று வரவேற்கிறார்!

தமிழ் வளர்க்க வேண்டும் என்ற நல்லிதயம் கொண்டவர்—என்று தன்னைக் கூறிக்கொள்ளுகிறவரின் இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் மொழித் துரோகம் முளைவிடுவதைக் கண்டு தமிழர் சமுதாயம் வெட்கப்படுகிறது; வேதனைப்படுகிறது!

விஞ்ஞானச் சொற்களுக்கே தமிழ்ச் சொற்களைத் தேடிக்கொண்டிருக்கும் காலம் இது; பிறமொழி நுழைவால் தமிழ்த்தாய் குலைந்து கிடப்பதை மாற்ற புதைந்து கிடக்கும் தமிழ்ச் சொற்களை மீட்டுவரும் நேரம்; இப்படித் தமிழ் தழைக்க இந்த நாடே பாடுபடும் வேளையில் தமிழின் தன்மை உணராத அமைச்சரின் விளக்கம் வியப்பைத்தான் தருகிறது!

அதேசமயம், பிறமொழி தயவின்றி தமிழ் வாழமுடியாது என்று 'ஆருடம்' சொல்லுகிற அமைச்சரின் கவனத்திற்கு, சென்னை நகரசபையின் தமிழ் காக்கும் செயல் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறோம்!

தமிழைக் கொன்றுபோட்ட வடமொழிச் சொற்கள் ஏராளம்; அவற்றில் ஒன்றுதான் "ஸ்ரீ"! அந்த 'ஸ்ரீ'யால் 'திரு' புதையுண்டது! 'ஸ்ரீமதி'யால் 'திருமதி' அழிந்துபோனது!

ஆனால், நகரசபை நிர்வாகத்தை நடத்துகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தமிழுணர்ச்சி குன்றாதவர்கள், அந்தக் கறை நீக்கும் செயலில் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழன்னையின் உடலில் படிந்திருக்கும் மாசை—தூசைத் துடைக்கும் முயற்சியில் ஆர்வத்தோடு பாடுபடுகிறார்கள்.

சென்னை நகரசபை நிர்வாகத்தின் கீழ் நடைபெறுகிற எந்தக் கடிதப் போக்குவரத்திலும் இனி ஸ்ரீ, ஸ்ரீமதி போன்ற சொற்களைப் பயன்படுத்தக்கூடாது; பதிலாக 'திரு', 'திருமதி' என்ற சொற்களைத்தான் உபயோகப்படுத்த வேண்டும் — என்று தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிவிட்டது நகரசபை!

சென்ற வாரத்திலே நடைபெற்ற இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் தமிழ்ச் சமுதாயம் இப்போது சீர்தூக்கிப் பார்க்கிறது. துரோகத்தையும் தூயநல் இதயத்தையும் கண்கூடாகக் காண்கிறது!

அமைச்சர் பாலில் நஞ்சு கலப்பது தவறில்லை என்கிறார்; நஞ்சின் ஆணிவேரையே கிள்ளி எறிகிறது சென்னை நகரசபை!

தூய்மை எது; அதற்கிடையே ஒளிகின்ற துரோகம் எது என்று இந்த நாட்டு மக்கள் மட்டுமல்ல; தமிழன்னையும் இப்போது புரிந்து கொண்டாள்.

ஃ

சிலம்பு

இந்திய அரசியல் சட்டத்தில் தேசிய மொழிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ள 14 மொழிகளைப் போல ஆங்கில மொழியும் இந்திய தேசிய மொழி என அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். இப்படியொரு தீர்மானத்தை பிராங் அந்தோணி அவர்கள் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார். பாராளுமன்றத்தின் சென்ற கூட்டத் தொடரிலும், தற்பொழுது நடைபெற்று வருகின்ற கூட்டத்திலேயும் இந்தத் தீர்மானம் பற்றி விவாதிக்கப்பட்டது. கடைசியில், தீர்மானம் கொண்டுவந்த பிராங் அந்தோணி அவர்களே அதைத் திரும்பப் பெற்றுக்கொண்ட விபரீத நிலையும் உருவாக்கி விட்டது.

மேற்கண்ட தீர்மானம் பற்றி உரைகள் நிகழ்த்திய இந்தி உணர்ந்து கொண்டு தற்போதைய நிலைமையைக் கண்டிக்கவும் இல்லை.

இந்தி மொழி வளர்ச்சியையும் குறிப்பிட்டு பின்னர் புரியாத புதுச் சொற்களை உருவாக்குவதைக் கண்டிப்பவர்—அராபிய எண்கள் தேவை என வற்புறுத்துபவர்—ஆங்கிலம் தொடர்ந்து காலவரையின்றி வழக்கிலிருக்கும் எனச் சொல்லுபவர் இன்றைக்கு இரயில் நிலையங்களில், அஞ்சல் துறையில், மைல் கற்களில் இந்தி விரும்பத்தகாத நிலையில் திணிக்கப்படுவதைத் தடுக்க அமைச்சர் என்ற முறையில் ஏதும் செய்யாமல் வெற்றுரைகளைக் கணக்கில்லாது தருவதால் பயனில்லை. அவர் மொழிவதெல்லாம் சிறுகச் சிறுக இந்தி ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிக்க வேண்டுமேயொழிய அவசரப்படும் இந்தி மொழி ஆதிக்கத்தை ஒட்டியே இருக்கும்.

எனவேதான், இந்தி மொழி ஆதிக்கக்காரர்கள் ஆங்கில மொழி இந்திக்குத் தடைக்கல்லாக இருப்பதை உணர்ந்து, அதை நீக்க முனைந்து நிற்கின்றார்கள். இன்றைக்கு ஆங்கில மொழியை வெறுக்கின்றவர்கள் இந்தி மொழி வெறியர்களைத் தவிர வேறு எவரும் இந்தியாவில் இல்லை. இந்த ஆங்கில வெறுப்பு வெள்ளை ஏகாதிபத்தியம் ஒழிந்து வடநாட்டு ஏகாதிபத்தியம் உருவாகும் நிலையில்தான் துவங்கியுள்ளது.

பண்டித நேருவின் தந்தையான மோதிலால் நேருக்கு பாரசீக மொழியும்; அராபிய மொழியும் மிக நன்றாகத் தெரியும். ஆனால் அந்தளவிற்கு வட மொழியும், இந்தியும் அவருக்குலமாகும், உலகத்தோடு ஒட்டிப் பழக உதவும் தொடர்பு மொழியாகும். இன்று ஆங்கிலம் ஒரு தனி நாட்டிற்கோ, ஒரு தனி இனத்திற்கோ சொந்தமான மொழியல்ல.

ஆனால், அதே நேரத்தில் ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிக்கத் துடிக்கும் இந்தி மொழியின் நிலைமை என்ன என்பதை அறிந்துகொள்ள வேண்டும். பாரசீக மொழியும், வேறு வட நாட்டு மொழிகளும் இணைந்த ஒரு கலவை மொழிதான் இந்தி. அதை நீத்தா என்றும் அழைப்பர். பல பொருள்கள் ஒன்று சேர்ந்த கலவைக்கே நீத்தா என்ற பெயராகும். எனவே

பண்டிதரின் புதுவேடம் அறிவோம்; பாகுமொழிக்கு நாம் மயங்கிடோம்!

பேசும் வட நாட்டுப் பகுதிகளைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இந்தியாவின் தேசிய மொழிகளுள் ஆங்கில மொழியும் ஒன்று என ஒத்துக்கொள்ளப்பட்டால் இந்தியின் வளர்ச்சிக்கு இடையூறுகள் நிறைய ஏற்படும் என ஒரு குரலில் கூறியுள்ளனர். இந்தியாவின் தனிப் பெரும் மொழி, ஆட்சி மொழி எனும் 'தகுதியற்ற பெருமை' இந்திக்குக் கிடைக்க வேண்டுமானால் ஆங்கில மொழிக்குள்ள இன்றைய மதிப்பும், நிலையும் குலைக்கப்பட வேண்டும் என்பதிலே இந்தி மொழி வெறியர்கள் கண்ணுங் கருத்துமாய் இருக்கின்றார்கள்.

இந்தி மொழி இந்திய சர்க்காரின் ஆட்சி மொழியாக, நிர்வாக மொழியாக ஆவதற்கான நடவடிக்கைகளை அரசாங்க உத்திரவுகளின் மூலம் இந்திய சர்க்கார் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. ஆட்சி மொழிக் குழுவின் அறிக்கையின் பேரில் நடவடிக்கைகள் மேற்கொள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு தயாரித்துள்ள அறிக்கை பற்றிய விவாதமும் பாராளுமன்றத்தில் நிகழவிருக்கிறது.

இப்படிப்பட்ட நெருக்கடியான முக்கிய கட்டத்தில்தான் நாட்டு மக்களின் கவனம், ஆர்வமெல்லாம் பிராங் அந்தோணியின் தீர்மானத்தின்பால் சென்றது. இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டிராத அனைவருக்கும் இந்தி மொழியின் புதிய வெறி பிடித்த ஆதிக்கத்தைத் தகர்த்தொழிக்க ஆங்கிலம் துணைபுரியும் என்ற நம்பிக்கை மேலும் வளர்த் தொடங்கியது.

இந்த நிலையில், பண்டித நேரு அவர்கள் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய உரை பொதுவான நிலைமை விமரிசனமாக அமைந்துள்ளதே தவிர, இந்தி ஆதிக்க மொழியாக வரக்கூடாது என்ற நாட்டு மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக இல்லை. இந்தி மொழி இன்றைக்குக் கொஞ்சங் கொஞ்சமாய் ஆட்சி மொழிப் பீடம் ஏறத் துவங்கியுள்ள நிலை பற்றி பண்டித நேரு அவர்கள் ஏதும் பேசவில்லை. இந்தி மொழி பல்வேறு துறைகளில் திணிக்கப்படுவதை பண்டித நேரு பட்டு காரியத்தைக் கெடுத்துவிடக்கூடாது என்பதுதான். ஆத்திரக்காரர்கள், அவசரக்காரர்கள் இவர்களைவிட தந்திரசாலிகள் அபாயமானவர்கள்—அபாயமானவர்களின் பட்டியலிலே நேரு முதலிடம் பெறுகின்றார்.

ஆங்கில மொழியின் சிறப்புகளையும், மேம்பாடுகளையும் விரிவாகப் பேசுவது எளிது. மில்டன், கீட்ஸ், ஷெல்லி, பைரன் போன்ற கவிஞர்களின் இனிய கவிதைகளைச் சுவைக்க —

வில்லியம் ஷேக்ஸ்பியர், பெர்னார்ட் ஷா, ஆஸ்கார் ஒயில்டு போன்ற நாடகாசிரியர்களின் கவின் பெரும் நாடகங்களைப் படிக்க —

பேகன், பெர்டினன்ட் ரஸ்ஸல், தோரோ போன்ற தத்துவப் பேரறிஞர்களின் நூல்களை உணர —

நியூட்டன், டால்டன், டார்வின், ஐன்ஸ்டின் போன்ற விஞ்ஞானிகளின் புத்தகங்களைக் கற்றறிய — உலகத்தின் புதிய போக்குகளை அவ்வப்போது தெரிந்து தெளிவுபெற ஆங்கிலத்தின் துணை தேவை எனக் கூறமுடியும். ஆனால், இந்தியாவில் ஆங்கில மொழியின் நிலை இந்தி மொழி வசிக்கும் இடத்தைப் பொருத்துத்தான் அமையும். அத்துடன் வேறு இந்திய மொழிகளின் வளர்ச்சியும், நிலைகுத் தெரியாது. அத்துடன் அவருக்கு, அவரது காலத்தில் வாழ்ந்திருந்தவர்களைப் போலவே இந்தி மொழியிடம் வெறுப்பிருந்ததாக மைக்கேல் பிரிச்சர் 'நேரு—ஒரு அரசியல் வாழ்க்கை வரலாறு' எனும் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பண்டித நேருவோ தன் மனதில் எண்ணுவதே ஆங்கில மொழியில்தான. ஒன்பதாவது முறைபாகவும், கடைசித் தடவையாகவும் 1942ல் அகமத் நகர் சிறையில் பண்டித நேரு அவர்கள் இருந்த சமயத்தில் அவரோடு அபுல்கலாம் ஆசாத் அவர்களும் உடன் சிறைப்பட்டிருந்தார்கள். இருவரும் ஒரே அறையில் காவலில் வைக்கப் பட்டிருந்தனர். அந்த காலத்தில் நேரு அவர்கள் தூக்கத்தில்கூட ஆங்கிலத்தில் பேசியதாக ஆசாத் குறிப்பிடுகிறார், ஆங்கிலத்தில் நேரு பேசுவது மட்டிலுமல்ல; ஆங்கிலத்திலேயேகனவும் காணுகின்றார் என்று ஆசாத் எழுதியுள்ளார்.

ஆங்கிலேயஏகாதிபத்தியத்தை அழித்தொழிக்க தங்களது வாழ்நாட்களை ஈந்தவர்களெல்லாம் இப்படி ஆங்கில மொழியினிடத்து நீங்காப் பற்றையும், நிறைந்த பாசத்தையும் வைத்திருந்தனர். ஆக, ஆங்கில மொழி வரலாற்றின் அம்சமாக, காலத்தின் விளைவாக இந்தியாவிற்கு கிடைத்த மாபெரும் அறிவுக் கருவூலமாகும்...

இந்தி மொழிக்கு நீத்தா என்ற இன்னொரு பெயர் இருப்பது மிக்கப் பொருத்தமாகும்.

16-ம் நூற்றுண்டில் மொகலாய வீரர்கள் வட நாட்டுக்காரர்களுடன் பழகியதின் காரணமாக இந்தி மொழி உருவாகத் தொடங்கியது. மொகலாய மன்னர்களும்,பாரசீகப்பெருமக்களும் இந்தியை சந்தைி மொழியாக—படைவீரர்கள் பேசும் மொழியாகவே கருதி, இந்தியை இழிவாகவும் மதித்து வந்தனர். அந்த மட்டமான இழிமொழியான இந்தியைத்தான் இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சி மொழியாக கொண்டுவரத் துடிக்கின்றனர்!

இன்றைக்கு இந்தி மொழியில் பல்வேறு மொழிகளின் சொற்கள் நிறைய உள்ளன. இந்தக் கலவை மொழியில் குறிப்பாக அராபி, பாரசீகம், பிராகிருதம், வடமொழி, அவதி போன்ற மொழிகளின் சொற்கள் ஏராளம் இருக்கின்றன.

இந்தியில் வழங்கிவரும் சொற்கள் பாரசீக மொழியிலிருந்தோ, அராபிய மொழியிலிருந்தோ தோன்றியிருந்தால் அச்சொற்களை நீக்கிவிட்டு வடமொழிச் சொற்களைப் பயன்படுத்துகின்ற நிலைமை தற்சமயம் உள்ளது. எனவே, இந்தி இன்றைய தினமும் புதிதாகச் செப்பனிடப்பட்டு உருவாக்கப்படும் மொழியாகவே இருக்கின்றது.

வடநாட்டில் இந்தி பேசப்படும் பகுதிகளிலேயே ஒரு புதிய பிரச்சினை மொழி ஆராய்ச்சியாளர்களால் எழுப்பப்பட்டு வருகின்றது. அரசாங்கத்தின் அறிவிப்புகளிலும், அயல் நாடுகளிலிருந்து வருகை தருகின்ற பிரமுகர்களுக்குப் படித்தளிக்கப்படும் வரவேற்பு உரைகளிலும், பிரசுரமாகும் பாராளுமன்ற நடவடிக்கை வெளியீடுகளிலும் பயன்படுத்தப்படும் இந்தி மொழிக்கும், நடைமுறையில் பேசப்பட்டுவரும் இந்தி மொழிக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன என்பதே அப்பிரச்சினையாகும். அமைச்சர்கள், அரசாங்க செயலாளர்கள் — அலுவலர்கள் உரையாடிக் கொள்ளு

[தொடர்ச்சி பக்கம்—10]

விற்பனையாகிறது!
நாங்கள் தமிழன்னைக்குச் சூட்டும் முத்தாரம்! இன்பத்தமிழ் இலக்கியக் கருவூலம்!!
கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தீட்டிய
தமிழ்ச்செல்வம்
"தேனலைகள்"
விலை ரூ. 1-50
முத்துவேல் பதிப்பகம், 77, மதுரை சாலை, திருச்சி, 8.
விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவு உண்டு!
தனிப்புத்தகம் வேண்டுவோர் புத்தக விலையுடன் 25 புதிய காசுகள் சேர்த்து பணவிடை (M.O.) அனுப்புக

தி. மு. க: என்னப்பா காங்கிரஸ்! பார்த்து வெகு நாட்களாயிற்றே?

காங்கிரஸ்: ஆமாம்; ஒரே அலைச்சல் இங்குமங்கும்!

தி. மு. க: அட, நீதானா டில்லிக்கும் திருவனந்தபுரத்திற்கும் பறந்து கொண்டிருந்தது? என்னவிருந்தாலும் நீ எடுத்த காரியத்தை முடித்து விடுகிறாயப்பா; அதிலும் 'இம்மாதிரி' காரியங்கள் என்றால் உனக்கு அலாதிப் பிரியம்!

காங்: நான் எதற்காகப் பறக்க வேண்டும்? அதை அங்குள்ள கேரளத் தலைவர்களே பார்த்துக் கொள்வார்கள். நான் அலைந்தது அதற்காக அல்ல; நாளைக்கு சுதந்திர தினம்; அதற்காக தடபுடலாக ஏற்பாடு செய்திருக்கிறோம்!

தி. மு. க: எங்கே துலுக்கன் தோட்டச் சேரியிலா; அல்லது ஆல் தோட்டத்துக் குடிசைப் பகுதியிலா; இல்லை வேறேதாவது பகுதிகளிலா?

காங்: சேச்சே! அங்கெல்லாம் நாங்கள் இப்போது ஏன் போகிறோம்?

தி. மு. க: பின்னர் சுதந்திர தினம் எங்கே கொண்டாடப் போகிறீர்கள்?

காங்: இது தெரியாதா உனக்கு? ....ஹி.....ஹி...... என்னப்பா ஏதேதோ பேசுகிறாய்; சங்க காலத்திலிருந்து 'உலகச் சண்டை'க் காலம்வரை வெளுத்து வாங்குகிறாய். இதைத்தெரிந்து கொள்ள முடியவில்லையே? சுதந்திர தினமெல்லாம் இப்போது சேரிகளிலோ மற்ற அசுத்தப் பகுதிகளிலோ கொண்டாடுவதில்லை!.......ராஜ பவனம்....தாலுக்கா ஆபீஸ்... போலீஸ் ஸ்டேஷன்....பள்ளிக்கூடம்...கதர்க் கடை—இப்படிப்பட்ட இடங்களில்தான் கொண்டாடுகிறோம்.

தி. மு. க: இதை உன் வாயாலேயே வரவழைக்க வேண்டும் என்றுதான் நான் பேசாமலிருந்தேன். ஆமாம்.........இப்போது சுதந்திரம் லண்டனிலிருந்து உங்கள் கவர்னர் பங்களா வரைக்கும் வந்திருக்கிறது.........ஆனால் இப்போதைக்கு அதைக் குடிசைக்கு நீங் கொண்டு வரப் போவதாகத் தெரியவில்லை!

காங்: இந்தாப்பா இப்படிப் பொடி வைத்துப் பேசாதே! எங்கள் கட்சி ஏழைகளின் கட்சி. ஏழைப் பாட்டாளி மக்களின் கட்சி. உழுதறுப் போரின் ஒப்பற்ற கட்சி தொழிலாளர்களின் துணைவன் எங்கள் கட்சி!

தி. மு. க: ஏழைகளின் கட்சி என்று பேசிக் கொள்வதில் மட்டும் பெருமையில்லை, நண்பனே! உன் கட்சியின் ஆட்சியில் எப்படி ஏழைகள் வாழ்கிறார்கள் என்பதைப் பொருத்ததே உன் பெருமை....

காங்: ஏன் இங்கு மக்கள் சுகமாகத்தானே வாழ்கிறார்கள்?

தி. மு. க: எந்த மக்கள்; சொந்தக் காரும், பங்களாவும் உள்ள பெருமக்களா?--இல்லை வீதியோரத்தில் நாதியற்றோராய்க் கிடந்து சுள்ளியடுப்பைப்பற்ற வைக்கவும் வகையின்றிக் கிடக்கும் மக்களா?

காங்: ....ம்......நாங்கள்தான் என்ன செய்வோம்? செலவை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு தூரம் குறைத்துக் கொண்டு தானே வருகிறோம்!

தி. மு. க: ஆமாம்; உங்கள் சுய நலத்திற்காக குறைத்துக்

காங்: ஏன் ஒதுக்கினால் என்ன? மேல்சபையும் அவசியம் தானே?

தி. மு. க: ஏன் அது அவசியம்; கீழ் சட்டசபையைவிட அதிகமான அதிகாரங்கள் படைத்திருக்கிறதா; இல்லை—கீழ் சட்டசபையும் மீறி ஏதாவது மசோதாவை அது நிறைவேற்றிவிட முடியுமா? அல்லது சமமான அதிகாரங்களாவது உண்டா?

காங்: இல்லை; நடைமுறையில் கீழ் சட்டசபையின் முடிவுக்கு உட்பட்டதாக — இன்னொரு கிளை சட்டசபையாக அது காட்சியளிக்கிறது.

தி. மு. க: என்றால் அந்த சட்டசபை அவசியம்தானா?

காங்: ஆசிரியர்களும், கலைஞர்களும், ஆபீசர்களும் அரசாங்க நிர்வாகத்தை அறிந்து கொள்ள — விவாதம் புரிய அது வாய்ப்பளிக்குமே?

தி. மு. க: ஏன் அவர்களைக் கீழ் சட்ட சபையிலேயே அங்கத்தினர்களாக்கி விடுவது தானே? அங்கு அவர்கள் தங்கள் தங்கள் 'துறை' அபிப்ராயங்களைத் தெரிவிக்கலாமல்லவா? இதை விடுத்து மேல் சபை ஏன்? அதற்காக ஆகும் செலவுகள் ஏன்?

காங்: ....

தி. மு. க: ஏன் மௌனம்?....

மேலும் எட்டு லட்சமோ மேல் சட்ட சபைக்கு?

கொண்டுதான் வருகிறீர்கள், சர்க்கார் கருவூலத்தை!

காங்: இது அபாண்டம்; ஆதாரமில்லாத குற்றச்சாட்டு!

தி. மு. க: எது ஆதாரமில்லாத குற்றச்சாட்டு? உங்களின் ஊதாரிச் செலவுதான் ஊரறிந்த ரகசியமாயிற்றே? ஆந்திராவிலும் மற்ற இடங்களிலும் மாங்கொட்டை தின்று உயிர்விடும் நிலையிருக்க. வெளிநாட்டினரே கண்டு வெட்கித் தலைகுனியும் விதத்தில் ஆடம்பர விடுதியாம் 'அசோக் ஓட்டலை' நடத்துவதும் உங்கள் அரசுதானே? மற்ற வெளி நாடுகளெல்லாம் சிக்கனத்தைக் கைக்கொண்டு ஐ. நா. சபைக்கு நன்கொடை கொடுப்பதில் நிதானம் காட்டும்போது — நம் ஏழை இந்தியா மாத்திரம் நன்கொடையை அதிகமாகத் தந்து கொண்டே போவதேன்? வியட்மின் ஜனாதிபதி ஹோ-சி-மின் தன் நாட்டு நிலையுணர்ந்து மூங்கில் வீட்டில் வசிக்கும்போது, இந் நாட்டின் கவர்னர்கள் லட்சம் லட்சமாக ஏழை மக்களின் வரிப் பணத்தை விழுங்கி, ஊதாரிச் செலவுக்கு உதாரணங்களாவது ஏன்? நல்லவர் வெறுக்கும் ஆடம்பரத்திற்கும் படாடோபத்திற்கும் நீங்கள் வாரியிறைக்கும் பணம் கொஞ்சமா நஞ்சமா? இப்போதுகூட சென்னை மேல்சபை கட்டிடத்திற்கென்று பணம் ஒதுக்கப் போகிறீர்களாமே?

உன் மௌனத்தைப் பரிபூரணமாக்கப் போகும் செய்தி இனிமேல் தானப்பா இருக்கிறது. அந்த மேல் சபைக் கட்டிடத்திற்கென 8 லட்சம் ரூபாய் செலவு செய்யப் போவது உனக்குத் தெரியுமா?

காங்: ஆ....மா...ம்........

தி. மு. க: ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பணமில்லை என்ற நிலையிருக்கும்போது அவசியமில்லாத மேல் சபைக்கு 8 லட்சம் ரூபாய் செலவில் கட்டிடமா? நகர சபைகளுக்கு மான்யம் தரப் பணமில்லையே என்ற கை விரிப்பு; அரசினர் ஊழியர்களுக்கு அதிகப் படியான சம்பளம் கொடுக்கப் பணமில்லை என்ற பரிதாபக் குரல் — இன்னும் செய்ய வேண்டிய சேரி திருத்தம் முழுக்க முழுக்க நடைபெறவில்லை. என்றாலும் ஆட்சியின் ஆடம்பரம் குறையவில்லையே ஏன்? நாட்டு மக்களின் குறைகள் நீங்கவில்லையே ஏன்? வளமான வாழ்வு கிட்டவில்லையே ஏன்? சுதந்திரத்திற்கு முன் நீங்கள் தந்த வாக்குறுதிகள் எங்கே?

காங்: ....

தி. மு. க: இதுதான் சுபிட்ச வாழ்வா; சுதந்திர வாழ்வா? இதுதானா ஆனந்த சுதந்திரம்? இதற்குத்தானா பள்ளுப் பாட்டு?' ஏன் நண்பா திரும்புகிறாய்...அடேடே ஏன் ஓடுகிறாய்? நில் நண்பா, எங்கே ஓடுகிறாய்?

ஒற்றைக்கால் ஓட்டகம்!

மாநாடு நடக்கப் போகிறது!

'நாம்—தமிழர்' என்று நமக்குள்ளேயே சொல்லிக் கொள்ள நினைக்கும் ஒரு கட்சியின் மாநாடு நடக்கப் போகிறது. அதற்கான முன்னறிவிப்புகளெல்லாம் வந்துவிட்டன!

ஆகஸ்டு பதினாறில் நடக்கப் போகும் அந்த மாநாட்டில் பிரபல திரைப்பட நடிகர்களும், கன்னட நாடு தந்த திராவிடத் தந்தை பெரியார் அவர்களும் கலந்து கொள்ளப்போகிறார்கள்.

'கூட்டம் வருமென அவர்கள் எதிர்பார்ப்பதில் ஆச்சரியமில்லை; என்றாலும் தி. மு. க. விற்கு உள்ளது போல் ஆதரவு பெருகுவதில்லையே என்ற நினைப்பு எழுந்தாலும் தவறில்லை!

'அவர்களைப் போலத்தானே நாமும் பிரிவினை வாதம் பேசுகிறோம்; வடக்கு—தெற்கு என்கிறோம்; நம்மறிவுக் கெட்டிய அடுக்கு மொழி பேசுகிறோம்: திரைப்பட நடிகர்களையும் கட்சியில் சேர்த்துக் கொள்கிறோம். இருந்தும் நமக்கு ஆதரவு பெருகாதது ஏன்?' என மாநாடு நடந்து முடிந்த பின்னர் சிலர் சிந்திக்கத்தான் போகிறார்கள். அப்போது அவர்களில் சிலர்—ஆய்ந்தறியும் திறன் பெற்றவராயிருந்தால் மிக எளிதில் தி. மு. க. வெற்றியின் ரகசியத்தைப் புரிந்து கொள்வார்கள்.

* தி. மு. க. விற்கு பகுத்தறிவுப் பாரம்பரியம் உண்டு!

* நிலையான கொள்கைகள் உண்டு!

* உறுதி வாய்ந்த தலைவர்கள் உண்டு.

* அதன் மார்பிலே தியாகத் தழும்புகள், உண்டு!

* அதன் உள்ளத்திலே அப்பழுக்கற்ற குடும்ப பாசம் உண்டு!

* ஒரு 'நீண்ட போராட்ட வரலாறு' அதற்கு உண்டு!

* கடமையிலுள்ள ஆர்வம், ஆர்வத்திற்கு இரையாகாத கண்ணியம், பகைவரும் மெச்சிடும் கட்டுப்பாடு இவை யுண்டு!

ஆனால் நாம்—தமிழர் இயக்கத்திற்கு....?

கற்றோரும் மற்றோரும் வெறுத்தொதுக்கும் கொத்தவால் சாவடி நடையில்—குழாயடி மொழியில் நடத்தப்படும் தினப்பத்திரிகை!

நாலைந்து பேச்சாளர்கள்!

நாளைக்கு ஒரு கட்சி மாறிடும், நிலையில்லாத தலைவர்கள்!

—இந்த ஒற்றைக்கால் ஓட்டகத்தை வைத்துக் கொண்டுதான் அரசியல் பாலைவனத்தில் தடுமாறுகிறார்கள் பாவம்!

முன் இதழில் :

பாழ்மண்டபத்தில் தன்னுடன் படுத்திருந்த முத்துநகையின் தலைப்பாகையை அவிழ்த்தான் இருங்கோவேள். முத்துநகையை ஆணாகக் காட்டிக் கொண்டிருந்த தலைப்பாகை அவன் கையிலே! கார் கூந்தல் இவள் தலையிலே! பெரிதும் ஆச்சரியமுற்றவனைப் போல் நடித்தான் இருங்கோவேள். முத்துநகையோ பேசாது, தலைகுனிந்து கொண்டாள்.

காதலெனும் தென்றல் வீசியது. கண்கள் நான்கும் ஒன்றையொன்று விழுங்கின. திடீரென்று பெரும் புயல் வீசிற்று. அதனால் அருகிலிருந்த தீப்பந்தம் அணைந்தது. இயற்கையை அந்த இரு உள்ளங்களும் வாழ்த்தின.

இரவு கழிந்து, கிழக்கு வெளுத்ததும் இருங்கோவேள் பேச ஆரம்பித்தான்.

முத்துநகையின் லட்சியத்தைப் பற்றிக் கேட்ட இருங்கோவேளை, "நீங்கள் சாதாரண விறகு வெட்டியல்ல என்பதற்கான ஆதாரம் என்னிடம் இருக்கிறது" என்று கூறி திடுக்கிட வைத்தாள்.

பெருவழுதிப் பாண்டியனுக்கு ஒற்று வேலை புரியும் வீரபாண்டியே தன் பெயர்—என்று எதிரிகளை ஏமாற்றுவதற்காக இருங்கோவேளே தயாரித்து பாழ்மண்டபத்தில் தவறவிட்ட போலிக் கடிதத்தை எடுத்துக் காட்டினாள் முத்துநகை!

போலிக் கடிதத்தைக் கண்டு தன்னை பாண்டிய நாட்டு ஒற்றன் என நம்பிய முத்துநகையின் பால் இரக்கம் உண்டாயிற்று, அவனுக்கு.

இருங்கோவேளிடம் சிக்கியுள்ள பாண்டி நாட்டுச் செழியனை மீட்பது பற்றிப் பேச்செழுந்தது. தாமரை தன்மேல் கொண்டுள்ள காதலைப் பற்றியும், தான் இருங்கோவேளின் அரண்மனைக்கு மருத்துவனாகப் போவது பற்றியும் குறிப்பிட்டு விடைபெற்றுக் கொண்டாள், முத்துநகை!

அருவிக்கரையில் படுத்திருந்த குதிரையைத் தட்டிக் கொடுத்த முத்துநகையின் முதுகைத் தட்டிக் கொடுத்தாள் தாமரை! மாளிகை சென்றதும் இருவரும் பேசக் கூடாது; பார்த்து மகிழ வேண்டும்—என்ற ஒப்பந்தத்தின் பேரில் இருவரும் இருங்கோவேளின் மாளிகை நோக்கி குதிரைகளைச் செலுத்தினர். இவையெல்லாம் மறைவிலிருந்து கவனித்த இருங்கோவேளும் தன்னுடைய குதிரையிலேறிப் புறப்பட்டான்........

13. மரமாளிகையில் மருத்துவன்

காட்டின் நடுவே கட்டப்பட்டிருந்த அம்மரமாளிகையின் அமைப்பும் மாளிகையை ஒட்டினாற்போல் காணப்பட்ட வீரர்களின் கோட்டமும் முத்துநகைக்கு இருங்கோவேளின் மீதிருந்த ஆத்திரத்தை அதிகமாக்கின. இத்துணை ஏற்பாடுகளோடு பகைமன்னன் தன் சூழ்ச்சிக் கோட்டையை உருவாக்கியிருக்கிறானே யென்ற திகைப்பும் அவளை சற்று நடுங்கச் செய்தது. எதிரியின் இருப்பிடத்திற்கே வந்து விட்டோம்—யாரும் கண்டுபிடிக்க இயலாத பகைவனின் பாசறையைக்கண்டு பிடித்துவிட்டோம் என்ற திருப்தியும் அவள் முகத்தில் மலர்ந்தது. அதோடு எந்தச் சமயத்தில் தன் வேடம் கலைந்து விடுமோ என்ற சந்தேகமும், அப்படிக் கலைந்துவிட்டால் அதனால் ஏற்படும் விளைவு எவ்வளவு கொடுமையாக இருக்கும் என்ற பயமும் அவளது மலர்ந்த முகத்தை உடனே கருகிடச் செய்தன.

பாழ்மண்டபத்திலே மழையும் காற்றும் போட்டி போட்டுக் கொண்டு தங்கள் கடமையைச் செய்த நேரத்தில் அவளது வேடம் அவனுக்கு எதிரே கலைந்தபோது அந்த நெருக்கடியிலும் ஒரு இன்பங் கண்டாள். சந்தர்ப்பத்தை வாழ்த்தினாள். அப்படியொரு சந்தர்ப்பம் இந்த மரமாளிகை வட்டாரத்தில் ஏற்பட்டுவிட்டால் — அய்யோ— அதை நினைக்கவே அவளால் முடியவில்லை. இருங்கோவேளைப் பற்றி அவ்வளவு கொடூரமாக அவள் கணக்கிட்டு வைத்திருந்தாள். கரிகால் மன்னரைக் கொல்லுவதற்குச் சதித் திட்டம் வகுத்த ஒருவன் மன்னருக்குரிய மதிப்புடையவன் அல்ல என்பது அவள் முடிவு. தமிழ்ப்பண்பு கொண்டவனாக இருக்க முடியாது என்பது அவள் கருத்து. கரிகால் பெருவளத்தானையே அவள் தெய்வமாகக் கருதிவிட்டதால் அந்தத் தெய்வத்துக்கு எதிரிடையான யாரையும் அவள் பழி வாங்கிக் கொள்ளத் தயங்கமாட்டாள். தன் திட்டத்துக்குத் துணையாக வீரபாண்டியின் சந்திப்பு அமைந்ததையும் அந்த சந்திப்பு தன் வாழ்வில் புதிய சுவை ஏற்றிவிட்டதையும் நாட்டுத் தொண்டுக்காகத் தனக்குக் கிடைத்த பரிசு என்றே அவள் தீர்மானித்து அகமகிழ்வுகொண்டாள்.

மாளிகையின் முகப்பு நெருங்க நெருங்க தாமரை, முத்துநகையைப் பார்த்துப் பார்த்துப் புன்னகை பூத்தாள். குதிரைகள் இரண்டும் அருகருகே வந்து கொண்டிருந்தன.

"இனி மேல் நமது கண்கள் தான் பேசிக்கொள்ள வேண்டும்!" என்றாள், தாமரை மெதுவாக!

"ஆமாம்! அதைத்தான் நான் அப்போதே சொன்னேன்." என்றாள் முத்துநகை.

"இந்த மாளிகை வெட்ட வெளியல்ல; இங்கே நாம் சந்திக்கக் கூடிய ரகசிய இடங்களும் இருக்கின்றன!" என்றாள் தாமரை.

இந்த வார்த்தைகள் முத்துநகையை ஒரு குலுக்குக் குலுக்கின!

"சரி! சரி!" என்று பேச்சை நிறுத்த ஜாடை காட்டினாள் முத்துநகை.

வாயிற் புறத்தில் குதிரைகளைக் கட்டிவிட்டு தாமரை, முத்துநகையை அழைத்துக் கொண்டு நேரே அண்ணியிருக்குமிடத்திற்குச் சென்றாள். அரசி பெருந்தேவி தன் படுக்கையில் இருந்தவாறே ஊமை மருத்துவனை வரவேற்று உட்காரச் சொன்னாள்.

"இவர்தான் என் அண்ணி. இந்த மாளிகையில் வாடும் இவர் வேளிர்குடியின் விளக்கு. இந்த விளக்கின் ஒளியை மங்கி விடாமல் காப்பாற்ற வேண்டியது தான் வைத்தியரே; உமது பொறுப்பு!" என்றாள் தாமரை முத்துநகையைப் பார்த்து.

முத்துநகை தலையை ஆட்டி ஆமோதித்தவாறு அரசியின் கையைப் பிடித்து நாடி பார்க்க ஆரம்பித்தாள்.

"ஏம்மா தாமரை! ஊமையென்றாய்; காது நன்றாகக் கேட்கிறதே!" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் பெருந்தேவி.

"இது பிறவி ஊமையல்ல அண்ணி! இடையிலே ஏற்பட்டது!" என சமாளித்தாள் தாமரை. நாடி பார்த்து முடிந்த பிறகு ஆகாயத்தைப் பார்த்து ஏதோ சிந்தனையில் இருந்து விட்டு முத்துநகை இருக்கையை விட்டு எழுந்தாள்.

"என்ன வேண்டும் வைத்தியரே !" என்று கேட்டாள் தாமரை.

ஒன்றும் தேவையில்லை யென்பதுபோல் சைகை செய்து விட்டு முத்துநகை, அங்குமிங்கும் உலவிக் கொண்டேயிருந்தாள் தலையைக் கீழே குனிந்தவாறு!

"பார்த்தீர்களா அண்ணி! எவ்வளவு தீவிரமாக சிந்திக்கிறார் என்று!" எனக் கேட்டு அண்ணியின் புன்சிரிப்பை பதிலாகப் பெற்று ஆறுதலடைந்தாள் தாமரை.

உலவிக் கொண்டிருந்த முத்துநகை, ஒரு ஓலையை எடுத்து ஏதேதோ எழுதினாள். அதை அரசியிடம் கொடுத்தாள். அரசி பெருந்தேவி அதை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு தாமரையிடம் தந்தாள். "இந்த நோயை நிச்சயம் குணப்படுத்தி விடலாம். இதற்கு சில முக்கியமான மூலிகைகள் வேண்டும். அதற்கிடையில் அரசரை நான் சந்தித்தால் பரவாயில்லை!" என்று அந்த ஓலையில் முத்துநகை எழுதியிருந்தாள்.

பெருந்தேவிக்கு இருங்கோவேள் மன்னன் முதலில் கூறிய மொழிகள் நினைவுக்கு வந்தன. அவன் மாளிகையில் இல்லை. எங்கேயோ போய்விட்டான் என்று மருத்துவனிடம் கூற வேண்டுமென்று அவன் குறிப்பிட்டிருந்தான். அதனால் அரசி, முத்துநகையிடம் "அரசரைப் பார்ப்பது என்பது இயலாத காரியம். அவர் இங்கில்லை. எங்கே போனார் என்றும் தெரியாது. எப்போது வருவார் என்றும் சொல்ல முடியாது!" என்று உடனடியாகப் பதில் கூறிவிட்டாள்.

முத்துநகை, தாமரையின் முகத்தைப் பார்த்தாள். ஏனெனில் அவள் அரசன் அங்கிருப்பதாகத்தான் கூறியிருந்தாள்.

முத்துநகையின் குழப்பத்தைக் கண்ட தாமரை, கண்ணசைத்து "அரசி பொய் சொல்லுகிறாள்" என்பதை ஜாடையாக உணர்த்தினாள். முத்துநகைக்கும் ஒரு புதிய உற்சாகம் பிறந்தது. பகைவர் வீட்டுக்குள்ளேயே தனக்கு ஆதரவாக ஒரு கருவி கிடைத்திருக்கிறதே என்ற மகிழ்ச்சி எல்லை கடந்தது அவளுக்கு.

"மருத்துவருக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடம்மா போ!" என்று அரசி தாமரையிடம் கூறினாள். தாமரை முத்துவை அழைத்துக்கொண்டு வேறுபக்கம் போனாள். அங்கும் பெண்களே நிறைந்திருந்தனர். அவர்கள் எல்லாரும் முத்துநகையை உற்று உற்றுப் பார்த்து தாமரையையும் ஓரக்கண்ணால் பார்த்து தங்களுக்குள் ஏதேதோ கருத்துரைகளைப் பரிமாறிக் கொண்டனர்.

அருமையான கொய்யாப்பழங்களை ஒரு அழகான தட்டில் எடுத்துவந்து தாமரை, முத்துநகைக்கு எதிரே வைத்து சாப்பிடுமாறு வற்புறுத்தினாள். அவளும் அதைச் சாப்பிட்டு முடித்துவிட்டு, தூக்கம் வருவதுபோல் பாவனை காட்டினாள். அங்கு கிடந்த நீண்ட மரப்பலகையொன்றின் மீது உறையில்லாத தலையணைகளை எடுத்துப்போட்டு அதிலே கண்ணயர்ந்திடுமாறு கூறினாள் தாமரை. அரசாங்க மருத்துவனாகச் சென்றிருக்கும் தனக்குச் செய்யப்படும் உபசாரத்தைக்கண்டு முத்துநகை வியப்படையவில்லை. இளவரசியின் காதலனாகச் சென்ற தனக்குத் தரப்பட்ட படுக்கையின் பெருமை குறித்தும் அவள் அதிர்ச்சி அடையவில்லை.

காரணம்; பட்டத்து அரசி பெருந்தேவி படுத்திருக்கும் கட்டிலே சொர சொரப்பான மரத்தால் அமைக்கப்பட்டதுதான். அக்கட்டிலுக்குக் கடைசல் கால்கள் ஒன்றும் அமைக்கப்படவில்லை. ஆணித்தந்தங்களை அதிலொன்றும் பொருத்தவில்லை. இலவம் பஞ்சு மஞ்சமொன்றும் அங்கே இல்லை. கரடுமுரடான மரப் பலகைகளைத்தான் அடுக்கி அதிலே அரசி சயனித்திருந்தாள். படுத்தபடியே சிந்தனையை அலையவிட்ட முத்துநகைக்கு இருங்கோவேள் குடும்பத்தார் மீது சற்று இரக்கமும் ஏற்பட்டது. எவ்வளவு ஆடம்பரமாக வாழ்ந்திருப்பார்கள். எத்துணை உறுதியான கோட்டை! அதிலே கொடிமரம்! அந்தக் கொடி நிழலிலே எவ்வளவு மக்கள் இருங்கோவேளின் ஆட்சிக்கு அடங்கி வாழ்ந்தார்கள்!

வேளிர் குடும்பத்து மன்னர்கள் அத்தனை பேரைக் காட்டிலும் அதிக ஆடம்பரமாக வாழ்ந்தவன் இருங்கோவேள்தான் என்று அவள் கேள்விப்பட்டிருக்கிறாள். அவனது சிம்மாசனத்தின் இருமருங்கிலும் நிறுத்தப்பட்டிருக்கும் சிங்கங்களின் திறந்த வாயிலே காணப்படும் பற்கள் அத்தனையும் வைரமாம்! சிங்கமே தங்கமாம்!

அவனது ராணியின் அந்தப்புரத்தில் முத்துக்களைத் தரையில் கொட்டி இருவரும் ஓடிப்பிடித்து விளையாடுவார்களாம். அப்படி ஓடும்போது வழுக்கிக் கீழே விழுவது ஒரு வேடிக்கையாம் அவர்களுக்கு! பனிக்கட்டியில்லாத குறையை முத்துக்கள் தீர்த்து வைக்கின்றன என்று இருங்கோவேள் வெகு அலட்சியமாகக் கூறுவானாம். அரசி பெருந்தேவியும் செல்லமாக வளர்ந்தவள். அந்தச் செல்லம் கடுகளவும் குறையாமல் இருங்கோவேளுடன் வாழ்க்கை நடத்தியவள்.

இன்றைய தினம் அவளுக்கு ஏற்பட்டிருக்கிற நிலை? முத்துநகையின் உள்ளம் உருகியது. குழந்தை மனங் கொண்ட தாமரை அரண்மனையில் இருந்திருந்தால் எவ்வளவு ஆடம்பரமாகக் காணப்படுவாள். இப்போது எவ்வளவு சாதாரணமாக அவள் காலங்கழிக்க வேண்டியிருக்கிறது? இந்தத் துன்பத்திற்கெல்லாம் காரணம் என்ன? போர்தான்! போருக்கு முதலிலே விதை தூவியது யார்? இருங்கோவேள்தான்! எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்காமல்—எதிரியின் படைபலத்தையும் ஆற்றலையும் உணராமல்— ஆழந்தெரியாமல் காலை விட்டதால் வந்த விளைவுதானே இதெல்லாம்! இப்படியொரு சமாதானம் அவளுக்கு! திடீரென்று தன்னையே கடிந்து கொண்டாள்.

"என்னடி முத்துநகை! நீ எங்கே வந்திருக்கிறாய்? எதற்காக வந்திருக்கிறாய்? — என்பதையே மறந்து விட்டாயா? மாற்றான் இடத்திலே வந்து உட்கார்ந்து கொண்டு அவன் குடும்பத்திற்காக மனமிளகுகிறாயே; நன்றாயிருக்கிறது உன் கடமையின் லட்சணம்!"

—என்று தனக்குத் தானே கூறிக் கொண்டாள்.

அப்பால் சென்றிருந்த தாமரை அருகே வந்து "வேறு ஏதாவது தேவையா?" என்று வினவினாள். முத்துநகை கண்களை மூடிக்கொண்டு மூச்சை பலமாக இழுத்து தூங்குவது போல் நடிக்கவே தாமரை "பாவம்—அயர்ந்த தூக்கம்!" என்று முனகிக் கொண்டே அதை விட்டு நகர்ந்து விட்டாள்.

தாமரைக்கும் ஒரே மனப் போராட்டம். தனக்கும் முத்துவுக்கும் ஏற்பட்டிருக்கிற காதலை அண்ணனிடம் எப்படி வெளியிடுவது? வெளியிட்டால் ஏதாவது விபரீதங்கள் ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது? அண்ணனுக்கு ஏற்பட்டிருக்கும் மனக் குழப்பங்களில் தானும் ஒரு புயலைக் கிளப்பி விட்டால் அவரால் தாங்கிக் கொள்ள இயலுமா என்றெல்லாம் அவள் எண்ணி எண்ணிச் சோர்வடைந்தாள்.

மெதுவாக நடந்தவாறே அண்ணியின் படுக்கையின் பக்கம் சென்றாள். அரசிக்கு சற்று இருமல் அதிகமாயிற்று. பணிப்பெண்கள் அரசியிடம் விரைந்தோடி சிகிச்சைகளில் ஈடுபட்டனர். தாமரையும் அண்ணியைத் தன் மார்பின் மீது சாய்த்துக் கொண்டு இருமல் அதிகத் தொல்லை கொடுக்காமல் தடவிக் கொடுத்தாள்.

அரசியின் இருப்பிடத்தையொட்டி வேறோர் இடத்தில் படுத்திருந்த முத்துநகையின் காதில் இருமல் ஒலி விழுந்தாலும் அவள் அதற்காக எழுந்து வராமல் தூங்குவது போலவே படுத்திருந்தாள்.

நீண்ட நேரம் இருமல் அரசியை வாட்டி வதைத்துப் பிறகு சிறிது அடங்கிற்று. "அம்மா! அப்பா!" என்று முனகியவாறு அரசி தன் வேதனையை வெளியிட்டுக் கொண்டிருந்தாள்.

"சாவும் என்னை வந்து கொண்டு போகத் தாமதிக்கிறது!" என்று கண் கலங்கக் கூறினாள் அரசி.

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் அண்ணி. நீங்கள் சாக மாட்டீர்கள். சாகக்கூடாது. சாக விடமாட்டோம்!" என்று குரல் தழுதழுக்கக் கூறினாள் தாமரை.

"நான் வாழ்ந்து என்னம்மா செய்யப்போகிறேன். உன் அண்ணனின் பெருமையும், புகழும் இழந்தது போலவே நானும் இளைத்து எலும்பும் தோலுமாக ஆகிவிட்டேன். அரண்மனை—அரசு—நாடு — எல்லாம் போன பிறகும் என் மன்னருக்கு நிம்மதியளிக்க நானொருத்தியாவது நன்றாக இருக்கக்கூடாதா? நானுமா இப்படியாகவேண்டும் — அட கடவுளே! இது என்ன சோதனையோ?" — என்று குமுறிக் குமுறிக் கதறினாள் அரசி.

"அடடா! என்ன அண்ணி! இப்படி அழலாமா? அழுதால் நோய்தானே அதிகமாகும்!" என்று அவள் முகத்தோடு தன் முகத்தை வைத்துக்கொண்டு கண்ணீர் வடித்தாள் தாமரை.

இந்த சோக நிகழ்ச்சியைச் செவி கொடுத்துக் கவனித்தவாறே தன் கண்களில் அரும்பிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் முத்துநகை. பெண்கள் அழுவதைப் பெண்களால் பொறுத்துக்கொள்ள முடியாதுதான். அதற்காகப் பகைவன் வீட்டுப் பெண்களின் அழுகைக்காக மனம் தளரலாமா? முத்துநகையின் உள்ளத்தைக் கெட்டிப்படுத்த— உறுதியாக்கிட எழுந்த எண்ணங்களுக்கும் — இரக்க சுபாவத்திற்கும் பெரும் போராட்டமே நடைபெற்றது. ஒருக்கணம் கடமையுணர்வு ஜெயிக்கும். மறுகணம் இரக்க இதயம் ஜெயிக்கும். இப்படித் திண்டாடிக்கொண்டு படுத்திருந்தாள் அவள். மீண்டும் அரசி கடுமையாக இருமத் தொடங்கினாள். மூச்சு நின்று விடுமோ என்கிற அளவுக்கு இருமல் பலமாக இருந்தது.

முத்துநகை படுக்கையை விட்டு எழுந்து அரசியின் அறைக்குள் எட்டிப் பார்த்தாள். அவள் பார்த்ததை யாரும் கவனிக்கவில்லை. அரசி, தாங்க முடியாமல் துடித்துத் துவளுவதையும் அவளோடு தாமரையும் துவண்டு துவண்டு விழுவதையும் கண்டு குடும்பபாசத்தின் உயர்வையெண்ணிக் கண் கலங்கினாள்.

"அய்யோ! இந்தக் குடும்பத்துக்கு இப்படியொரு கஷ்டமா? இந்நேரம் இவர்கள் அரண்மனையிலேயிருந்தால் ஆயிரம் வைத்தியர்கள் வந்திருப்பார்களே!" என்று எண்ணி வருந்தினாள்.

அரசி, கஷ்டத்திலேயிருந்து சிறிது விடுபட்டு சோர்ந்துபோய் தாமரையின் நெஞ்சில் சாய்ந்து படுத்துக் கொண்டாள். தாமரை, தன் மெல்லிய கரங்களால் அரசியின் தோள்பட்டையில் தட்டிக் கொடுத்தவாறு கண் கலங்க உட்கார்ந்திருந்தாள். அப்போது ஒரு வீரன் உள்ளே நுழைந்து வணங்கி நின்றான்.

"என்ன செய்தி?" என்று தாமரை ஆவலோடு கேட்டாள்.

[தொடர்ச்சி பக்கம்—12]

" நாங்கள் சினிமாவுக்கு வசனம் எழுதுவது வீணாகப் போகாது !" என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைவர் மு. கருணாநிதி கூறினார்.

—என்பதாகக் கீழே எழுதி மேலேகண்ட கேலிச் சித்திரத்தையும் "தினத்தந்தி" என்ற ஏடு வெளியிட்டிருக்கிறது. சித்திரத்தில் ஒரு உருவத்தில்தான் பெயர் எழுதியிருந்தது. பின்னால் நிற்கும் உருவத்திற்குப் பெயர் எழுத சித்திரக்காரர் மறந்து விட்டார். அதை நாம் பூர்த்தி செய்திருக்கிறோம்; அவ்வளவுதான்! திருத்தத்திற்கு அந்த ஏடு நன்றி செலுத்துமென்றும் எதிர்பார்க்கிறோம்!

தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளிலும், தபால் மூலமும் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்.

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்

இங்கிலீஷ் தபால் மூலம் **கற்கலாம்**

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து 24—8—59 வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள் 25—8—59 முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும்போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும், பேசவும், கட்டுரைகள் வரையவும், கடிதப் போக்குவரத்து செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்—சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவனவாக இருக்கும்" எனில், மிகைப்படுத்தி சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு

1. 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள்.
2. ஆதாரப்பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம்.
3. இங்கிலீஷ் ஓரளவுக்கு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பிரிவு பிரிவாகவும் பயிற்சி அளிக்கப்படும்.
4. இந்தத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விபரங்களையும் எட்டு நயேபைசே (8 புதிய காசுகள்) தபால்தலை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில் உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

மனிதனின் கதை...

[2—ம் பக்கத் தொடர்ச்சி]

தது. ஆம், மாதவி. எலிசபெத்தின் தன்னம்பிக்கையும், நெருக்கடியான சமயங்களில் குலையாத நெஞ்சுறுதியும் இங்கிலாந்தைக் காப்பாற்றியது. ஹிட்லரின் படையெடுப்பு இங்கிலாந்தின் மீது ஏற்படவிருந்தபொழுது சர்ச்சிலின் உற்சாக மொழிகள் பிரிட்டிஷ் மக்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டிய நிகழ்ச்சியை மட்டுமே இதற்கு இணையாக சொல்லலாம். தங்களுடைய இனத்தின் ஆற்றலில் பிரிட்டிஷ் மக்கள் அசையாத நம்பிக்கையுடையவர்கள்.

எலிசபெத் ராணி ஆட்சிக்கு வந்தபொழுது சீரழிந்திருந்த இங்கிலாந்தை, சீராக்கும் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அதைச் செம்மையாகச் செய்து முடித்தவன் வில்லியம் செசில். ஆட்சி முறை சிறந்தோங்க அல்லும் பகலும் அயராது விசுவாசத்துடன் உழைத்து எலிசபெத்தைப் பேரரசியாக ஆக்கியதில் செசிலின் பங்கு மிகப் பெரியது. செசில்தான் பிரதம மந்திரியாகவும், எல்லாக் காரியங்களிலும் எலிசபெத்தின் வலது கரமாகவும் விளங்கினான். நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கையாண்டு, வரிகளை மிகுதியாகப் போட்டு, காலியாக இருந்த கஜானாவை முதலில் நிரப்பினான். இங்கிலாந்தின் பொருளாதாரம் சீர்பட்டது. கடலாதிக்கம் வளர்ந்து, காலனிகள் தோன்றவே இங்கிலாந்து படிப்படியாக செல்வச் சிறப்புப் பெற்றது.

மூன்று வயதிலேயே தாயை இழந்து, இளமைப்பிராயம் முழுவதும் எண்ணற்ற இடர்களுக்கு ஆளாகி, அரியணை ஏறியபிறகும் சதிகாரர்களுக்கு அஞ்சிவாழ்ந்து அலங்கோல நிலையில் இருந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, உள் நாட்டில் வளம் நிரம்பிய அமைதியான சூழ்நிலையையும் வெளி விவகாரங்களில் இங்கிலாந்துக்கு வல்லரசு என்ற அந்தஸ்த்தையும் வழங்கிய எலிசபெத், ஆங்கில வரலாற்றில் பொற்காலத்தைப் படைத்தவள். காவலரையும், கவிவாணரையும், போர் வீரர்களையும் மாலுமிகளையும் விழியாலேயே ஆணையிட்டு வேலை வாங்கிய வித்தகி அவள்! கொடுமை பலபுரிந்தாள்; ஆனால் மக்களின் வெறுப்பை அவள் சம்பாதித்துக் கொள்ளவில்லை! காதல் செயல்களில் ஈடுபட்டாள்; ஆனால் நாட்டின் கண்ணியத்தைக் குலைத்து விடவில்லை! 'கன்னியாக வாழ்ந்து, நாட்டின் நலனுக்கே தன்பெண்மையை ஆர்ப்பணித்தவள்' என சில வரலாற்று ஆசிரியர்கள் அவளை வாழ்த்துகிறார்கள்.

தங்களின் சுகபோக வாழ்வுக்காக மக்களின் நலனைப் பணயமாக வைத்து சூதாடிய மன்னர்கள் பலரை வரலாற்றில் பார்த்த நமக்கு, எலிசபெத் சிறந்த ராணியாகக் காட்சியளிப்பதில் வியப்பில்லை. ஆங்கில வரலாற்றில் அவளுடைய ஆட்சிக் காலம் ஒரு பொன்னேடு!

அன்புள்ள,

அகத்தியன்.

நூலேணி

எங்கள் உரை நூல்

பல்கலைக் கழக முதனிலை வகுப்பு (பி. யூ. சி. வகுப்பு—1960—)க்குரிய தமிழ் பாட உரை நூல் பாராட்டிற்குரியது.

கடவுளர் படத்தை மூவண்ணத்திலிட்டுக் காசு சேர்க்கும் வணிகர் போலன்றி தமிழன்னையை அழகுறச் சித்தரித்திருக்கும் பாங்கு பாராட்டத்தக்கது.

பள்ளி மாணவர்களுக்கேற்ற வகையில் அரும்பதத்திற்கு விளக்கம் தந்து, வினு—விடைகள் மூலம் ஐயம், திரிபு அத்துணையையும் போக்கிடும் நல்ல உரை நூலிது.

மாணவர்கள் இந்நூலின் தரத்திற்கேற்ற ஆதரவு தருகிறார்கள் என்பது உறுதி!

[கிடைக்குமிடம்: புக்ஸ், (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை—1. விலை ரூ. 2. 50 பக்கங்கள்: 420]

மனை மாட்சி

ஆசிரியர்: தோ. ந. வீரராகவன்

கட்டிலில் கணவன் படுத்திருப்பான்; அவன் கைபிடித்தவளோ வயிற்றிலுள்ள குழந்தையைச் சுமந்து கொண்டு நின்றுகொண்டிருப்பாள் நெடுநேரம்! இது சாதாரணமாக நம் நாட்டில் காணும் காட்சி.

இத்தகு காட்சிகள் சாட்சி சொல்லும் நம்நாட்டின் இழிநிலை மாறிட பெண்கள் சமுதாயம் வீறுகொண்டெழ வேண்டும். அதற்குக் கல்வியும் பொது அறிவும் தேவை!

விதவைக் கோலம், இருதார விவாகம் ஆகியவற்றைத் தாக்கும்போது ஒரு 'நளினம்' தோன்றவே செய்கிறது. எரிமலையென வெடிக்கும் சொற்களில் தாக்காது பெண் ஒருத்தி தாக்குவது போலவே எழுதியிருப்பது மிக நன்று!

பர்மா அரசியல் தலைவர் இறந்தால் 'கறுப்பு பாட்ஜ்' அணிந்த மாணவிகள் விபுலானந்தர் இறந்தபோது அதைப் பற்றி ஒன்றும் தெரியாதிருந்த நிலையை நாவலர் சோமசுந்திர பாரதியின் மகள் குறிப்பிடுவது உருக்கம் தருவதாயிருந்தது.

பெண்கள் மட்டுமல்ல; பெண்களை மதித்து நடக்க வேண்டிய ஆண்களும் படிக்க வேண்டிய நூல் இது!

[இமயப் பதிப்பகம், நாகப்பட்டினம். விலை. ரூ. 1—25. பக்கங்கள் 90.]

கொள்கையிலே குழப்பம்!

ஆசிரியர்: எஸ். தேவராசன்.

கலப்புத் திருமணங்கள் தேவை, சமுதாயத்தில் முளைத்து விட்ட சாதி, மத வேற்றுமைகளைக் களைந்தெறிய — எனும் நல்ல கொள்கையுடன், லெனினிச — மார்க்கிச பாதையில் — பொருள் முதல்வாத வாடையில்— 'ஏக இந்திய பாணி'யில் எழுதப்பட்ட நாடகம். கதைக்கரு பலமில்லாததாலும், பழம் நிகழ்ச்சிகளே வருவதாலும் நாடகம், சுவையுள்ளதாய் அமையவில்லை.

[கிடைக்குமிடம்: வள்ளுவர் பண்ணை, பிராட்வே, சென்னை-1. விலை: ரூ. 1·50. பக்கங்கள்: 142.]

முடிந்தது சோக நாடகம்; மீண்டும் ஒரு கேலி நாடகம்!

ஒரு நாடகம் முடிந்தது.

சதியும், சூழ்ச்சியும், சாகசமும், கொலையும், களவும் போட்டி போட்டுக் கொண்டு விளையாடிய சோக நாடகம் முடிந்தது.

எதிரிலே அமர்ந்திருப்போர்—எதிரியாய் நாடகத்தில் நடித்தவனின் வஞ்ச நெஞ்சம் கண்டு—மனக்கண்ணாடியைப் பாளம்பாளமாக அறுத்தெறியும் அவனது வைரம் பாய்ந்த தீய இதயம் கண்டு—தீச் செயல்கள் கண்டு கண்ணீர் வடித்தனர்!

வில்லனின் வெறி ஒழுகும் வாயில் இரையாக விழும்போது — அந்தக் கல்லிதயக் கொடியவனின் கோரக் கரங்களிலே கதைத் தலைவி சிக்கியபோது அவள் 'ஓ' வென அலறிய காட்சி காண்போரைக் கண்ணீர்க்குளத்தில் ஆழ்த்திற்று. பிறகு அந்த அழகுத் திருவுருவம் பட்டமரமாய்—கெட்ட பாலாய் உலகத்தைப் பார்க்கவும் அஞ்சி ஒடுங்கி, நடுங்கித் திரிந்த நிலை ஈரமில்லா நெஞ்சிலும் இரக்க உணர்வை வழியச் செய்தது.

கதைத் தலைவனாய்—கதாநாயகனாய் நடித்தவர் அவ்வளவு திறமையில்லாதவராயிருந்த காரணத்தால் இந்த சோக நாடகத்திலே வில்லன், கதாநாயகனை மாறியிருக்கின்ற அதிசயத்தைக் காண்கிறோம்.

இந்தப் 'புதிர்' போடும் நாடகம் வேறு எங்கும் நடக்கவில்லை; அரசியலில் நடந்த ஒன்று; அதுவும் அண்மையில் நடந்த ஒன்று!

ஆம்; கேரளத்தில் இதுவரை நடந்து வந்த சோக நாடகத்தைத்தான் குறிப்பிடுகிறோம்!

அகில இந்தியத் தத்துவம் பேசும் கம்யூனிஸ்டுகள்தான் இந்த சோக நாடகத்தின் கதாநாயகர்கள்!

'இந்திய யூனியன்' — எனும் அடிமைநிலைக் கோட்பாட்டை ஒத்துக் கொண்டு, காலச் சூறுவளியிலே, கயமையும், சூழ்ச்சியும் தந்த பரிசை ஏற்றுக் கொண்டு பரிதாபத்துக்குரியவர்களாய்—ஆளும் பதவியிழந்தவர்களாய் இன்று காட்சியளிக்கிறார்கள்!

இதயத்திலே கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த ஈரத்தை வற்றடித்துக் கொண்டு, பிற்போக்கு எண்ணம் எனும் சாக்கடைச் சேற்றை அள்ளி அப்பிய வண்ணம், 'ஒழித்தே தீருவோம், கம்யூனிஸ்டுகளை'—என்று 'எக்காள கீதம்' பாடிக் கொண்டு, திரிந்த கேரளத்து ஜனநாயக விரோதிகள்தான்—டில்லி காங்கிரஸ் மூலவர்களின் செல்லப்பிள்ளைகள்தான் இந்த சோக நாடகத்தில் வில்லன் பாத்திரம் தாங்கும் விராதி வீரர்கள்!

கால்படும் இடமெல்லாம் குளிர்ச்சியான எண்ணங்களை உண்டாக்கி, வளமான வாழ்வினை தந்து, இன்பகீதம் பாடவைக்கும் 'ஜனநாயகம்' தான் இந்த நாடகத்தின் கதைத் தலைவி!

கதைத் தலைவியின் கற்பைச் சூறையாடி அவள் அங்கங்களை அணுஅணுவாகச் சுவைத்ததோடு மட்டும் விடவில்லை, இந்த 'நவீன' வில்லன்! அவளுடைய ஆலிலை வயிற்றைக்கீறிப்பிளந்து, குடலை வெளியே பிடுங்கிச் சுவைத்து மென்று தின்றதோடு மட்டும் நின்றுவிடவில்லை; ஆழக் குழிதோண்டி நீளப் புதைத்திடவும் நினைத்தான்; நினைத்ததை முடித்தான்!

கேரளத்து மண்ணிலே ஜனநாயகத்தின் அழகு புதையுண்டு விட்டது! கார் குழலையும், கொவ்வை இதழ்களையும் விழுங்கிவிட்ட அந்தச் சுடுகாட்டின்மீது கோல் தூக்கி, கூறு நகை பூத்து நிற்கிறான், வில்லன்!

கதாநாயகனும் கம்யூனிஸ்ட்டுகளோ செய்வதறியாது தடுமாறுகிறார்கள்; தத்தளிக்கிறார்கள்! டில்லியின் சர்வாதிகாரத்தை மெல்ல மெல்ல உணர்ந்து வருகிறார்கள்; உள்ளூர வருந்துகிறார்கள், இதை முன்பே உணராதது பற்றி!

எப்படியோ ஜனநாயகத்தின் உயிர் போக்கடிக்கப்பட்டுவிட்டது! அதனுடைய சங்குக்கழுத்து 'சடசட' வென முறிந்துவிட்டது; குவளைக் கண்கள் தோண்டி எடுக்கப்பட்டன! கார் கூந்தல் வெட்டி, கன்னம் கிழித்து, மண்ணுக்கு இரையாகத் தந்துவிட்டார்கள்.

கதாநாயகியாம் ஜனநாயகம் உயிரில்லாப் பிணம்!

கண் கலங்கி செய்வதறியாது நிற்கும் கம்யூனிஸ்ட் கதாநாயகர்!

களிப்பு மீதூர, கொக்கரித்து நிற்கும் 'எதிர்க்கட்சி' வில்லன்!

இந்தக்கேரளத்து ஜனநாயகப் படுகொலையில் பங்கெடுத்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை ரோம் நாட்டு வீரன் சீசரை, சூழ்ந்து நின்று ஆளுக்கொரு குத்துவிதம் குத்திக் கொன்ற கொடியவர்களின் எண்ணிக்கையைவிட அதிகம்!

ஆம்; கதர் அணிந்த காங்கிரசார், பிரஜா சோஷலிஸ்ட்டுகள், புரட்சி சோஷலிஸ்ட்டுகள், நாயர் சங்கம், கத்தோலிக்கர்கள், கிறிஸ்துவ மிஷனரிகள், முஸ்லீம் லீக், ஈழவர் சங்கம், இன்னும் பலப்பல கொடுமதியாளரின் பளபளக்கும் கொடுவாட்கள்தான் அங்கு நேர்மையைக் கொத்திக் கூறு போட்டன!

அச் சோக நாடகம் முடிந்து இப்போது ஒரு கேலி நாடகம் ஆரம்பமாகியிருக்கிறது.

வெற்றி விழாக் கொண்டாடியோர் இன்று மகிழ்ந்து இறுமாந்து கிடக்கிறார்கள். அந்த இறுமாப்பிலே அவர்களையும் மீறி உண்மைகள் — ஊரைக் குலை நடுங்க வைக்கும் உண்மைகள் வெளிவருகின்றன.

கல்விக்கூடங்களை வியாபாரச் சந்தைகளாக்கிய சமுதாய விரோதிகளின் தீச் செயலை ஒடுக்கிட ஒரு சட்டம் கொண்டு வந்த கேரள அரசாங்கத்தை அழித்தொழிக்க கிளம்பிய படைக்குச் செலவான தொகை பற்றி ஒரு சுவைச் சேதி வெளிவந்திருக்கிறது.

அரசாங்கச் செலவில் சிறைக்குள் சென்றுவந்த அந்த வீரர்களுக்கு ஆன செலவு,

50 லட்சம்!

ஆம்; 50 லட்சம் செலவாகியிருக்கிறது அந்த 'விடுதலைப் பட்டாள'த்திற்கு'!

இவ்வளவையும் செலவழித்து விட்டு சிறைக்குச் சென்றவர்கள் எவ்வளவு பேர் தெரியுமா?

அரசியலார் கணக்கு தவறெனக் கூறும் மன்னத்து பத்மநாபன் கணக்குப்படி 1,00,000 பேர் சிறைக்குச் சென்றவர்கள்!

லட்சம் பேரே போனதாக வைத்துக் கொண்டாலும் 50 ரூபாய் ஆளொன்றுக்கு செலாகியிருக்கிறது! அரசாங்கத்தின் விருந்தாளியாகப் போகும் இவர்களுக்கு இவ்வளவு பணமேன்?—எனச் சந்தேகப்படுவோருக்கு மேலும் ஒரு அதிர்ச்சி தரும் செய்தி காத்திருக்கிறது.

இந்த 'எதிர்ப்பு இயக்கம்' நடந்த காலம், ஒன்றரை மாதங்கள் தானும்! ஒன்றரை மாதத்திற்கு ஆளொன்றுக்கு 50ரூபாய் விழுங்கிக் கொண்டுதான் 'இயக்கம்' நடந்திருக்கிறது!

தன் செல்லப்பிள்ளைகளின் இக் கூத்தைக் கண்டு ரசித்த பின்னர் டில்லியின் ஆதிக்கம் தன்னுடைய புத்தம் புதிய ஆதிக்கக் கருவியைப் பிரயோகித்தது! அதோடு அவனுடைய தாகம் தணிந்தது: களிப்பும் பிறப்பெடுத்தது! 'காங்கிரஸ் தவிர்த்த மற்றவர் ஆளக் கூடாது' என்ற புதுச் சட்டப் பிரிவை மறைமுக உண்டாக்கிற்று!

இந்த நாகரிக வேலைக்குத் தூண்டுகோலாய், தூணாய் நின்ற நாயர் சொசைட்டியின் (விமோசன சமார சமிதியின்) தலைவரும், கதர் கட்டிய பெருமகனும், கல்விச் சட்டம் நுழைவதற்குச் சிறிதும் இடம் கொடுக்காதபடி குறுக்கே நந்தியென நின்றவருமான திரு. மன்னத்து பத்மநாபனுக்கு பட்டம் வழங்கப் போகிறதாம், டில்லி அரசு!

இந்த வதந்தி உண்மையாய் இருந்தால் இந்த நாட்டின் பிற்போக்காளர் அனைவரும் இறும்பூதெய்துவர்; இறந்துபட்ட துரோகிகள் உயிரோடு இருந்திருந்தால் இன்னும் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள், தங்கள் 'பரம்பரை'யைக் காப்பாற்றி வருபவருக்கு சரியான பட்டம் கிடைத்தது என்று!

ஆம்; மன்னத்து பத்மநாபனுக்கு நல்ல பொருத்தமான பட்டத்தைத்தான் வடவர் அரசு வழங்க இருக்கிறது! கல்விச் சட்டத்தை எதிர்த்து, வடநாட்டான் காலில் ஆட்சியை கொண்டு சமர்ப்பித்துவிட்ட அவருடைய அரசியல் குணத்திற்கேற்ற பட்டத்தைத்தான் தர இருக்கிறது! அந்தப் 'பட்டம்' என்ன தெரியுமா?

'பத்மவிபூஷண'

குன்றெடுத்த பெருந்தோளன், மன்றம் மகிழ வீணை நரம்பு தனைத்தடவும் கலைஞன், பத்து நாடுகளின் தலைவனாயிருந்து ஆண்ட தென்னிலங்கை வேந்தனும் இராவணனைக் காட்டிக் கொடுத்து, வடவனின் காலடியில் வணங்காமுடியை வீழச் செய்த விபூஷணனின் பட்டம் இவருக்கு மிக மிகப் பொருத்தமானது!

—அடியார்

தி. மு. க. 11-ம் ஆண்டு தொடக்கவிழா
நாளாகிய 17-9-59-ல் வெளிவருகிறது!

★ சூடான அரசியல் கருத்து!
★ சுவைமிக்க கற்பனைகள்!
★ அன்றாட அரசியலின் ஆராய்ச்சி அரங்கு !!!
★ தி. மு. க. அணிவகுப்பில் முரசுகோட்டும் போர்ஏடு!

தாய் நாடு
ஆசிரியர்: T.K.சீனிவாசன்

★

ஆசிரியரின் தொடர்கதையும்
முதல் இதழிலேயே இடம்பெறும்

விலை 16 காசு — ஆண்டு சந்தா ரூ. 8.
முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் விண்ணபிக்கவும்.

'தாய் நாடு' அலுவலகம், சென்னை — 14.



சென்ற 30—7—59 அன்று திருக்கழுக்குன்றம் ஊராட்சி மன்றத்தின் சார்பில் சென்னை நகர சபைத் தலைவர் அ. பொ. அரசு, துணைத் தலைவர் சிவசங்கரன், ஆசிரியர் மு. கருணாநிதி—ஆகியோருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. அன்று மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் நகரசபைத் தலைவர், துணைத் தலைவர், மு. க.— ஆகியோர் வீற்றிருக்க சகோதரர் இராம. அரங்கண்ணல் பேசிக்கொண்டிருக்கிறார்.

வேலை தேடித்தரும் லட்சணம்!

★

துப்பாக்கி பிடித்து நாட்டின் எல்லைக்கு அப்பாலும் இப்பாலும் போரிட்ட வீரர்கள், வீடு திரும்பிய பின்னர் வேலையற்று வீதிகளில் கண்ணீர் பெருக்கி நின்று விடக் கூடாதே என்பதற்காக வேலை தேடித்தரும் நிறுவனங்கள் இந்த நாட்டில் தோன்றின.

ஆனால் பேனா பிடித்து, படித்ததை தாளில் எழுதிவிட்டு வெளியே வந்த இளைஞர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் பணியையும் அந்த நிறுவனங்களே ஏற்றுக் கொண்டன.

அதிகாலையிலேயே கூடிவிடுவர் அந்தக் கட்டிடத்தைச் சுற்றி—இது துவக்கக்காலத்திலிருந்த நிலை. ஆனால் இன்றோ அந்தக் கூட்டம் எண்ணிக்கையில் தேய்ந்து வருகிறது!

காரணம், அந்த நிறுவனத்தின் பேரிலிருந்த நம்பிக்கை மக்கி மறைந்து வருகிறது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 69 இலட்சம் பேர்களுக்கு வேலை தேடித் தரத் திட்டமிடப் பட்டது. பெரிய திட்டம் தான்; கேட்போர் பிரமிப்பு அடைவர். வெளிநாட்டுக் காரர்களுக்கு அது வேடிக்கை காட்டப் பயன்பட்டது. எதிர்க்கட்சிகளின் வாயடைத்துப் போடப் பயன்பட்டது. திட்டம் நிறைவேறினால் இப்படியாகும், அப்படியாகும் என்று ஆசைவார்த்தை கூறி 'கோடி கோடியாய்' மக்களிடமே கடன் வாங்க—வரியாய் வசூலிக்க அந்தத் திட்டம் பயன்பட்டது. ஆனாலும் 1961-ல்—அதாவது இந்த மகோன்னதத் திட்டம் 'சுப முடிவு' அடைந்த பின்னர் வேலை வாய்ப்பற்றோர் எத்தனை தெரியுமா?

70,00,000 பேர்!

இந்த நிலையில் வேலை வாய்ப்புகள் கிடைக்காதிருக்குமானால்—அடுத்த 7 ஆண்டுகளில் எத்தனை பேருக்கு வேலை தேடித் தர வேண்டியிருக்கும் தெரியுமா?

2,80,00,000!

ஆம்; 2 கோடி 80 லட்சம் பேருக்கு வேலைதேடித்தர வேண்டியிருக்கும். இந்த லட்சணத்தில் வேலை தேடித்தரும் நிறுவனங்கள் ஆண்டொன்றுக்கு எவ்வளவு பேருக்கு வேலை தேடித் தந்துகொண்டிருக்கிறது தெரியுமா?

வெறும் இரண்டரை லட்சம் பேருக்குத்தான்!

அந்த இரண்டரை லட்சத்திலும் நிலையில்லாத (டெம்பரரி) வேலை பெற்றோர் எத்தனையோ?

அந்த நிலையில்லாத வேலைக்கும் லஞ்சம் தந்தவர், காக்காய் பிடித்தவர், காலில் விழுந்தவர் எத்தனையோ? ∴

ரோமாபுரிப்...

[7—ம் பக்கத் தொடர்ச்சி]

"செழியனை அடைத்திருக்கிறோமே; அந்த இடத்தை ஒரு முறை திறந்து பார்த்தால் நல்லது இளவரசி!" என்றான் வீரன் பரபரப்புடன்!

"ஏன் எதற்காக?" என்றாள் தாமரை. அதற்குள் அரசியும் மெதுவாகக் கண் விழித்து வீரன் பேசுவதைக் கவனித்தாள்.

"அந்த சிறைக்குள்ளேயிருந்து சப்தமே இல்லை. ஒரு வேளை; ஆள் செத்திருப்பானோ என்று சந்தேகமாயிருக்கிறது!" என்றான் வீரன்.

"போனால் போகட்டுமே!" என்றாள் அரசி அலட்சியமாக!

"இல்லை மகாராணி! அவன் சாகாமல் இருப்பதுதானே நமக்கு நல்லது. அவனை வைத்துத்தானே இழந்த நாடுகளைப் பெறவேண்டுமென்று அரசர் திட்டமிட்டிருக்கிறார்" என்று வீரன் பதில் கூறினான்.

இதற்குள், முத்துநகைக்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டிவிட்டது.

"இப்போது என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?"—இது அரசியின் கேள்வி.

"ஒருமுறை அந்தக் கூண்டைத் திறந்து பார்க்க அனுமதி தேவை. அதோடு கூண்டுக்குரிய திறவுகோலும் தங்களிடம் இருந்தால்......" வீரன் இழுத்தாற் போல் பேசினான்.

"அரசர் இல்லாத நேரத்தில் கூண்டைத் திறப்பதென்றால்...." அரசியும் சந்தேகத்துடன் பதில் கூறினாள்.

"நானே நேரில் போய் திறந்து பார்த்து விட்டு வருகிறேன் அண்ணி!" என்று தாமரை கூறவே, அரசி அதற்குச் சம்மதித்து தன் தலையணைக்குக் கீழேயிருந்த திறவுகோலையெடுத்துத் தாமரையிடம் கொடுத்து "ஜாக்கிரதை!" என்று எச்சரித்து அனுப்பி வைத்தாள்.

தாமரை போவதையே பார்த்துக் கொண்டிருந்த முத்துநகை, தானும் எப்படியாவது அவளுடன் சென்று செழியனின நிலையை அறிய வேண்டுமென்ற ஆவலுடன் சுற்று முற்றும் பார்த்தாள். எந்தப் பக்கத்திலும் வழியில்லை. அரசி, படுத்திருக்குமிடத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும். என்ன ஆனாலும் ஆகட்டுமென்று அந்த இடத்தைக் கடந்து தாமரையைப் பின் தொடர்ந்தாள்.

அதைக் கண்ட அரசி "நில்லு! நில்லு!" என்று முத்துநகையைத் தடுத்து விட்டாள்.

முத்துநகை எதுவும் புரியாமல் விழித்தாள். ∴

நாகை,
பாண்டியனில்
சிறப்புக் கூட்டம்

❋

23—8—59 ஞாயிறு காலை
9 மணிக்கு நடைபெறும்.

தலைவர்:
கோ. செங்குட்டுவன்
[சென்னை மாவட்ட தி. மு. க. துணைச் செயலாளர்.]

பேசுவோர்:
அறிஞர் அண்ணா
அம்பில்தருமலிங்கம்

கட்டணம்: ரூ. 1. அணா 8.
பெண்கள் அணா—4.

— நாகை வட்ட தி. மு. க.

★ செப்டம்பர் 15! ★

தென்னகத்தார்,

சிந்தை-அணு-ஒவ்வொன்றும் செயல் மணக்கச் செய்திட்ட தலைவர்-இருட்டறையில் ஒளிவிளக்கு ஏற்றிவைத்த எழுத்துவேந்தர் — விடுதலை விடிவெள்ளி - எழுச்சி முரசம் -

எங்கள் அண்ணா
50-ம் ஆண்டு
பொன்விழா மலர்

உங்கள் கரங்களை அழகுபடுத்தும்.

★ 'முரசொலி' வெளியிட்ட எந்த மலரும் ஏமாற்றம் தந்ததில்லை!

★ ஈடு இணையற்ற முயற்சியே முரசொலியின் தனிப்பண்பு!

★ அண்ணா பொன்விழா மலரை எத்துணை எழிலோடு முரசொலி வழங்கும் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

★ மலர்பற்றி உங்கள் எண்ணங்களை வெளியிடுங்கள்.

ஒரு ரூபாய் விலையில்.

...உயர்ந்த முறையில்.......மலர் வருகிறது!

இப்போதே விற்பனையாளர்களிடம் உங்கள் பெயரைப் பதிவுசெய்துகொள்ளுங்கள்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி', அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை—6. தமிழ்நாடு.